[illegible]

[illegible]

[illegible]
[illegible]

உ

குகமயம்.

திருச்சிற்றம்பலம்.

# புவனகிரிபுராணவசனம்.

இது.

ஸ்ரீவேங்கடேசசாஸ்திரிகளால்

வடமொழியினின்றுமொழிபெயர்க்கப்பட்டு

மேற்படிஸ்தலத்துத்

தேவஸ்தானத்தர்மகர்த்தா

மு. வேலாயுதமுதலியாரவர்கள்

திரவியசகாயங்கொண்டு

பு. வெ. சுப்பராயமுதலியாரால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இராக்கத௵ மாசி௴

1916.

REGISTRAR OF BOOKS 17 AUG 1916 MADRAS

## மீனாக்ஷியம்மைஸ்தோத்திரம்.

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற் பிடியே
வருக முழுஞானப், பெருக்கே வருக பிறைமௌ
லிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்,--விருந்தே
வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி,
விளைக்கும் பரமா னந்தத்தின் விளைவே வருக பழ
மறையின்,--குருந்தே வருக வருள்பழுத்த கொம்
பே வருக திருக்கடைக்கண், கொழித்த கருணைப்
பெருவெள்ளங் குடைவார் பிறவிப் பெரும்பிணிக்
கோர்,--மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளி
யே வருகவே, மலயத் துவசன் பெற்றபெரு வாழ்
வே வருக வருகவே.

---



உ

குகமயம்.

## விநாயகர் துதி.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

## சுப்பிரமணியர் துதி.

திருநில மருவிக் காலி னிருவழி யடைபட்டோடி
சிவவழி யுடனுற் றேக பரமீதே-
சிவசுட ரதனைப் பார்வை மனமென மருவிக்கோல
திரிபுர மெரியத் தீயி னகைமேவி;
இருவினை பொரியக் கோல திருவத ளுருவத் தேகி
யிருள்கதி ரிலிபோற் பூமி தவதுடே-
இருவது முருகிக் காய நிலையென மருவித் தேவ
ரீனையவ னெனவித் தார மருள்வாயே;
பரிபுர கழ லெட் டாசை செவிடுகள் படமுத் தேவர்
பழமறை பணியச் சூல மழுமானும்-
பரிவொடு சுழலச்சேடன் முடிநெறுநெறெனக்கோவு
பரியினை மலர்விட் டாடி அடியோர்கள்;
அரஹரா வுருகிச் சேசே யெனதிரு நடனக்கோல
மருள்செயு முமையிற்பாக ரருள்பாலா-
அலரணிகுழல்பொற்பார்வைதிருமகளமளிப்போரோ
டடியவர் கபிலைக் கான பெருமாளே. (க)

உ

குகமயம்.

# முனிவர்கள் கேள்விச்சிறப்பு.

முற்காலத்தில் நைமிசாரணியத்திலே தவஞ்செய்து மலத்தினின்றும் விடுபட்டவர்களாயும், விருப்பு வெறுப்பு அற்று ஆனந்தக்கடலில் மூழ்குவோர்களாயும், சிவபெருமானை அடையவேண்டும் என்கிற அவாவுள்ளவர்களாயும் சிவபுண்ணிய சரிதையில் பொழுதுபோக்குபவர்களாயும், உள்ள சௌனகர், வைகானசர், வாலகில்லியர் முதலிய ரிஷிகள் யாவரும் ஒன்றாகக்கூடி, இருந்தபோது வியாசருடைய சீடராயும், சுருதி ஸ்மிருதி புராணம் முதலியவற்றின் உண்மையை அறிந்தவராயும் தர்ப்பாசனத்தையுடையராயும் உபதேசம் செய்பவராயும் இரண்டாவது வியாசரெனச் சொல்லக்கூடியவராயும் இருக்கின்ற சூதமகாமுனி எழுந்தருள அம்முனிவர்கள் சமீபத்தில் சென்று பக்தியோடு அஞ்சலிசெய்து நமஸ்கரித்துத் துதித்து இந்தப்பிரகாரம் விண்ணப்பிக்கிறார்கள்.



கிருபாநிதியே! வியாசருடைய சீடர்களில் சிரேஷ்டரே! பதினெண்புராணப்பொருளை மனப்பெட்டியில் வைத்திருப்பவரே, உம்மிடத்தில் ஒரு விஷயம்கேட்க அவாவுடையவராயிருக்கின்றோம். என்னவெனின்!

கடலாற்சூழப்பட்ட இந்நிலவுலகத்தின்கண் உள்ள சிவஸ்தலம் தீர்த்தமுதலியவற்றின் மகிமைகளை உம்முடைய வாக்கினால் கேட்டிருக்கின்றோம். அன்றியும் நெடுநாள் கடுந்தவஞ்செய்து அநேக பிர்ம்மரிஷிகளுடன்கூடிப் பற்பல உபநிஷத்துப் பொருளைக் கேட்டும் மும்மல அழுக்குநீங்காததால் பரத்துவ நிச்சயம் புலப்படாமல் மனம் சஞ்சலப்படுகின்றது. ஆதலால், சுவாமீ! இவ்வுலகத்தில் எந்த இடம் மனத்திருப்திதரத்தக்கது? எந்த இடம் சரீரவருத்தமின்றித் தவஞ்செய்து சித்தியடையச்செய்வது? எந்த இடம் தவம், கர்மானுஷ்டானங்களால் பாவத்தைநீக்கி மனம் ஒருமைப்பாடுசெய்வது? எந்த இடம் மனைவி மக்கள் முதலியவற்றின் வெறுப்புக்கேதுவாகும்? எவ்வி

டம் அறிவுகெடாமல் பிர்ம்மஞானம் நிலைக்கச் செய்வது? எவ்விடத்தில் சிவபிரான் விட்டுணு முதலிய தேவர்களோடு வீற்றிருப்பது? எந்த இடத்தில் பெரியவர்கள் தேவர்களின் அநுக்கிரகம் சுலபத்தில் கிடைக்கும்? எந்த இடம் யாகபலன்கள் உண்டாகும்? எந்த இடத்தில் திரிலோக தீர்த்தங்களும் ஏககாலத்தில் கூடும்? எந்த இடத்தில் தானம், ஓமம், செபம்முதலியவற்றை எத்தேவதையை நினைத்துச் செய்யினும் சிவபிரான் தாமேற்றுமகிழ்ந்து முத்தியைக்கொடுப்பார்? எந்த இடம் யமனால் காணப்படாத மகிமையுடையது? இவ்வினாக்களுக்கு விடையளித்தருளவேண்டும் சுவாமீ என்று சௌனகாதிமுனிவர்கள்கேட்கச் சூதமுனிவர் நன்றென மகிழ்ந்து தமது குருவாகிய வேதவியாசரையும், சிவபெருமானையும் தியானித்து க்ஷணநேரத்தில் எல்லாத்தலங்களையும் ஆலோசித்துப் புராதன அதிரகசியமான க்ஷேத்திரத்தை நினைத்துச் சொல்லத்தொடங்கினார்.

ஓ முனிவர்களே!

உங்களால் விரும்பப்பட்ட க்ஷேத்திரம் மூன்றுலோகத்திலும் மேலானதும் வியாசபிரமர்களின்



அருளால் தேவரகசியமும் புராதனமும் எனது வாசஸ்தானமுமான மகத்தான தலத்தை உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

முற்காலத்தில் காசிபர் முதலாகிய சப்தரிஷிகளும், அகத்தியர், கபிலர், குச்சர், போதாயனர், ஆங்கிரர், வால்மீகி, சதாநந்தர், மதங்கர், கண்ணுவர், துருவாசர், ரிஷிசிருங்கர், யாக்கியவற்கியர், தௌமியர், பிருகு, சாண்டில்லியர், காலவர், சைமினி, ஆபஸ்தம்பர், வாமதேவர், காத்தியாயனர் முதலிய ரிஷிகள் முத்திசாதனமுற எண்ணிச் சிவபெருமானைத் தெரிசிக்குமாறு முதலில் கைலையங்கிரியையடைய அவ்விடத்தில் பாவெளியாயிருந்ததைக்கண்டு வைகுண்டஞ்சென்றார்கள். அங்கே மகாவிஷ்ணுவின் ஊர்தியாகிய கருடனைப் புறப்படுஞ் சமயத்துக்கண்டு அவரைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்தெழுந்து, சாட்குண்ணியபரிசுத்தரே? எல்லாவற்றையும் அறிந்தவரே? எங்களினும் சிரேஷ்டரே?

உலகத்தில் யாவரும் வைகுண்டத்தையடையவிரும்ப நீர் பூலோகஞ்செல்ல விரும்புவதற்குக் காரணம் என்னவென்றுகேட்க, கருடர் உடனே

ரிஷிகளைப்பார்த்து, கைலாச வைகுண்டங்களைவிட முத்தியைக்கொடுப்பதில் அதிதீவிரமும் புவனுத்திரி எனப்பேர்கொண்டதும், எல்லாத்தலங்களிலும் மேம்பட்டதும், தேவர்கள் ரிஷிகள் வசிப்பதும், தீர்த்தோத்தமமுள்ளதும், எல்லாத்தலயாத்திரைகளின் புண்ணியபலத்தை எளிதிற்கொடுப்பதும், அஸ்வமேதம் முதலிய யாகபலன்களைத்தருவதும், தாய்தந்தை பெண் பிராமணன் பசு முதலியவர்களைக்கொன்ற பாபத்தைத்தவிர்ப்பதும், நினைத்தமாத்திரம், இந்திரன் இயமன் முதலியவர்களால்நேரிடும் அச்சத்தையகற்றுவதும், ரிஷிகளால் நேரிடும் கொடுஞ்சாபத்தையோட்டுவதும், எல்லா ஆபத்துக்களுமாகிய மேகங்கட்குப் பெருங்காற்றுப்போல்வதும், அழிவில்லாததும், அநேக ஜனனங்களில் அடையமுடியாத பிர்ம்மஞானத்தைத்தன்னையெண்ணியவுடன் கொடுப்பதும், மற்றத்தலங்களில் விமோஜனமாகாத மகாபாதகநீக்குவதும், சுலபத்தில் முத்தியீவதும், பரிசுத்தமுள்ளதும், பிறவியைக்கெடுப்பதும், மிகக்கொடிய பாவங்களாகிய காட்டிற்குக் காட்டுத்தீப்போல்வதும், சிவபெருமானுக்கு நேத்திரம்போல்



வதும், தேவரகசியமாவதும் பல க்ஷேத்திரங்களால் சூழப்பட்டதும் சோழதேசத்தைச் சமீபித்ததும், கடலுக்கு இரண்டுகுரோச தூரம் மேற்கிலும் சிதம்பரத்துக்கு ஒரு குரோசம் வாயுதிக்கிலும் காவேரிக்கு ஒரு யோஜனை வடக்கிலும் ஸ்ரீமுஷ்ணத்துக்கு ஐந்து குரோசம் ஈசான்னியத்திலும் விர்த்தாசலத்துக்கு ஏழு குரோசம் கிழக்கிலும் திருவைந்திரபுரத்திற்கு இரண்டு யோஜனை தெற்கிலும்(ஜெனனத்தை நீக்கும் வெள்ளாற்றுக்கு வடகரையிலும்) உள்ளதுமான க்ஷேத்திரமொன்றிருக்கிறது.

இன்னும் எல்லாத்தேவர்களாலும் நமஸ்கரிக்கப்படுபவர்களும், கிழக்கிலும்மேற்கிலும் இருந்து, அடியவர்களை ரக்ஷிப்பதிற் பற்றுடையவர்களும், கருணையால் தர்மார்த்தகாமமோக்ஷங்களைக்கொடுப்பவர்களும், சங்கார ஸ்திதிகர்த்தர்களுமான சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் பேரானந்தத்தோடு எஞ்ஞான்றும் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரமும் இப்புவனுத்திரியே.

அவ்வளவு சிறப்பமைந்த புண்ணியவடிவமான அந்த க்ஷேத்திரத்தையடையவும், அங்கே

எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் விஷ்ணு மூர்த்திகளைத் தெரிசிக்கவும் முயற்சிகொண்டு செல்கின்றேன். ஏ, ரிஷிகளே! நீங்கள்வந்தது முத்தியைவிரும்பியாதலால் அத்தலத்தன்றி எவ்விடமும் கிடைக்காது; யார் யார் முத்தியைவிரும்பினும் அந்தப்புவனாசலமே உறுதியாய்த்தரும். ஆதலால் அங்கே செல்லுங்கள் என்று கருடனாற் சொல்லப்பட்ட வார்த்தையைக்கேட்டு உரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்தக்கடலிலமிழ்ந்தியவராய்ச் சகல சாராமிர்தத்தைப்பானம் பண்ணும் அவாவுடைய காசிபாதி முனிவர்கள் முத்தித்தலங்கிடைத்ததால் நாமெல்லாரும் முத்தர்களென்று மகிழ்ந்து கூடிக் கருடனைத்தோத்திரஞ்செய்து பின்னரும் உத்தம ரிஷியான அகத்தியமகாமுனிவரிடம் அத்தலமகிமையைக்கேட்க விரும்பினார்கள்.

---



## முதலாவது புவனாத்திரிபுரச்சருக்கம்.

எல்லாவற்றையும்உணர்ந்த முனிவர்பெருமானே! முத்தியில் ஆசையுள்ள எங்களிடத்தில் தயவுடன் அந்தப் புவனாசலத்தின் சரித்திரங்களை விரிவாகக்கூறவேண்டும். அத்தலத்திற்கு நாமங்கள் எத்தனை? தீர்த்தங்கள் எத்தனை? அவற்றின் பெயர்க்காரணங்களும், மூர்த்தியின் மகிமையும், தலமகிமையும் தெரிவதுடன் சிவபெருமான் அத்தலத்தில் எக்காலமும் விரும்பி எழுந்தருளியிருப்பதற்குக்காரணமும், தீர்த்தமகிமையும் எல்லாம் அறிந்துகொள்ள அவாவுடையேம். ஆதலால் தீனர்களாகிய எங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்த முனிவரை நோக்கி அகத்தியமுனிவர் கூறியருள்வார்.

அத்தலத்திற்குப் புவனாத்திரி, வேதபுரி, வில்வாரண்யம், வராகபுரம், பஞ்சக்குரோசம், பாஸ்கரம், தேவநகரம் என எழுநாமம் என்று பெரியோர்கள் சொல்வார்கள். அவற்றுள் புவனாத்திரி என்று முதலிற் பெயர்வந்ததற்குக்காரணம் என்னவென்றால், முற்காலத்து இவ்வுல

கத்தில் பலி என்று பெயருள்ள ஓர் அசுரன் தவம், வலிமை, கொடுமைமுதலியவற்றில் சிறந்தவனாய் மூன்று உலகங்களையும்வென்று அவற்றுள் சுவர்க்கவுலகத்தையடைந்து தேவர்களை வெருட்டித் தள்ளித் தேவவுலகத்தைத்தானே அரசாண்டுவந்தான். அதுகண்டு இந்திராதிதேவர்கள் பயந்து பிரமதேவரிடஞ்சென்று விண்ணப்பித்து அவரோடும் திருப்பாற்கடலையடைந்து உலகநாதனாகிய ஸ்ரீ நாராயணனைக்கண்டு மனம் வாக்குக் காயங்களினாலே வணங்கி நமஸ்கரித்து எழுந்து துதித்து மாபலிச்சக்கரவர்த்தியாகிய அசுரன் செய்யுங்கொடுமைகளை விண்ணப்பித்துக் கொண்டு அஞ்சலியஸ்தராகநின்றார்கள். உடனே கிருபாநிதியாகிய விஷ்ணுமூர்த்திதேவர்களைப்பார்த்து அதிவலிமையுடையவனும், நீண்டஆயுளையுடையவனும் எவர்களாலும் கொல்லப்படாதவனுமாயுள்ள அவ்வசுரன் செய்யும் கொடுங்கோல்வலிமையும் அவனுடைய துஷ்டகாரியங்களும் முன்னமே யறிந்துளேன்.

அத்தகைய அவனை வாமனாவதாரம் (குறள் வடிவம்) எடுத்துப்போய், அவன் யாகஞ்செய்யுங் காலத்தில் மூன்றடி மண் யாஜித்துப் பின் தந்திரத்



தால் இரண்டடிமண்ணுக்கு இரண்டுலோகங்களையும் ஈரடியாலளந்தடக்கிக்கொண்டு, மற்றோரடிக்காக அவன் தலையில் ஒரு அடிவைத்து அவனைப் பாதாள வுலகத்தழுந்தி வீழ்த்திவிடுகிறேன். ஆதலால் நீங்களனைவரும் பயப்படாமற் போய்வாருங்களென்று அமிர்தம்போன்ற வார்த்தைகளைத் திருவாய்மலர்ந்தருளினார். உடனே தேவர்கள் யாவரும் தங்கள் தங்கள் இடத்திற்குப் போய்விட்டார்கள்.

அப்போது கேட்டுக்கொண்டிருந்த ஆதிசேஷன் தன்னுடைய தலைவராகிய மகாவிஷ்ணு எடுக்கும் வாமனாவதாரகாலத்தில் இந்த நிலவுலகத்தைத் தாங்குவதற்கு என்னாலும், எனக்குதவியாகிய அட்டநாகம், அட்டகஜங்களாலும் முடியாது; ஆதலால்வேறு துணையும் வேண்டுமேயென்னும் பயத்தால் கழுத்துவளையப்பெற்று நலிவுற்றனன். அப்பொழுதே மலைகளும், காடுகளும், விருக்ஷங்களும், பூமியும், மாடமாளிகைகளும் அசைவுற்றன; தேவர்கள், முனிவர்கள், பிராமணர்கள், ஏனையவர்கள், மிருகங்களாதி அஃறிணைப் பொருள்கள் பிரளயம் நேர்ந்ததோ என ஐயமுற்றலமந்து நடுங்குங்கால், தேவர்கள் யாவரும் ஒன்றாகக்கூடி ஸ்ரீ நாராயண

னிடம்போய்த் துதித்துப் பிரார்த்தித்து நின்றார்கள். உடனே விஷ்ணு பரமேசுரனை மனத்தில் தியானித்தலும், அவர்வந்து விஷ்ணுவால் வழிபாடுபெற்று ஆசனத்திருந்து விஷ்ணுவே என்னவிசேடம் என்னலும், அதற்கு அரி சமீபத்தில் நான்கொள்ளும் வாமனவதாரத்தின் அச்சத்தால் ஆதிசேஷன் நிலைகுலைந்து கண்டநடுக்கமுற உலகம் அசைவுற்றது. உயிர்களெல்லாம் அலமருகின்றன. பூதேவியும் வருந்துகின்றாளாதலின் ஆதிசேஷனோடு பூமியைச்சுமக்க வேறொருவரை நியமித்தால் நலம் என்றார். இவைகளைக்கேட்ட சிவபெருமான் அவர்கருத்தின்படியும் வேறுமோர் காரணம்பற்றியும் சொல்லுவார்:—விந்திய கிரிக்குத் தமையனும், பர்வதோன்னதமாயுமுள்ளதும், பொன்னிறமானதும். எல்லாமலைகளினும் அதிகவமைகொண்டதும், தேவர், முனிவர், கந்தருவர், வித்தியாதராதியர் தவஞ்செய்யவும், வசிக்கவும் பெற்றதும், மதயானைகளின் உயிர்கவரும் சிங்கங்கள் வசிக்கின்ற குகையுற்றதும், பக்ஷிகள் நிறைந்திருக்கும் விருக்ஷங்களையுடையதும், சுனை, பயிர், வெளியிடம் அமர்ந்ததும், இன்னும் பலவிதவைபவங்கள் பொருந்தியுள்ளதும் பறக்கக்கூடிய சிற

குகளைக்கொண்டதுமான சுபத்திரன் என்னும் பெயருள்ள பர்வதம் ஒன்றே இப்பூமியைச்சுமக்கும் ஆற்றலுடையது. அது இப்போது இந்திரன் வச்சிராயுதத்திற்குப் பயந்து நம் கைலைக்கு வடக்கில் ஐந்நூறுயோசனைதூரத்தில் சமுத்திரத்துள் அந்தரங்கமாய் மறைந்து மூழ்கிக்கிடக்கின்றது. அதை விளித்து ஆதிசேஷனோடு பூமியைச் சுமக்குமாறு செய் என்றார். உடனே அதைக்கேட்ட விஷ்ணு கருடனைப்பார்த்துச்சுபத்திரபர்வதத்தைச்சீக்கிரம் அழைத்துவா என்று ஆஞ்ஞாபித்தார். அங்ஙனம் உத்தரவுபெற்ற கருடன் ஒருகணத்தில் அப்பர்வதத்தினிடம்போய்ச் சுபத்திரப்போல் பலதரம் கூப்பிட அவன் நீயார்? என்னை ஏன் அழைக்கின்றனையென, கருடன் மகாவிஷ்ணுவின் உத்தரவால் வந்தவன் என்பேர் கருடன் என்றதும், அவ்வசலம் கருடனே உனக்குச் சுபமுண்டாகுக; உன்னைத் துதிக்கின்றேன். இந்திராகுலிசத்தினின்றும் ரக்ஷித்தருளுக என்றது. அப்போது கருடன் இன்றுமுதல் நீ பயப்படாமல் மகிழ்வடைவாய் என்று சொல்லிச், சுவாமியிடம்வா என, அம்மலையைப் பார்க்கிறவர்கள் பழைய விந்தமோ என்றஞ்சவெளி வந்து, நேர்நின்ற கருடனைப்பார்த்துத் துதித்து, உன்னுடைய தெரிசனத்தால் நன்மையடைந்தேன்; ஒன்றுக்குங்கூடாத கொடியேனை ஸ்ரீ நாராயணன்

அழைத்துவாஎன்றது விந்தையேயென்றுசொல்ல, உடனேகருடன் சுபத்திரனைக்கொண்டுபோய்ச்சிவபெருமான் விஷ்ணுமூர்த்திகளிடம் சேர்ப்பிக்க, அக்கிரி இருவரையும் நமஸ்கரித்து எழுந்து முதல் பரமசிவனையும் பின் விஷ்ணுவையும் முறையாகத்

## துதித்தல்.

| | |
|---|---|
| கௌரிநாயகனே | இலக்குமிநாயகனே |
| அநாதிமலமுத்தனே | அச்சுதா |
| அப்பிரமனாற்காணப்ப | பிரமனைஉந்திக்கமலத்து |
| டாத திருமுடியோய் | டையோய் [யாய் |
| காளகண்டனே | நீலமேகசாமளமேனி |
| சந்திரசேகரா | மதிவதனா |
| யானையுரியோய் | பீதாம்பரனே |
| சர்ப்பாபரணா | சர்ப்பசயனா |
| வேதண்டகோதண்டா | கோவர்த்தனகுடையாய் |
| சங்காரகருத்தா | திதிகருத்தாவே |
| காலகாலனே | அசுரகாலனே |
| தீக்கண்ணனே | தாமரைக்கண்ணனே |
| சகலதேவரும்வணங் | தேவசிரேஷ்டனே |
| கும் உத்தமனே | |



என்று இவ்வாறு துதித்துச் சுவாமிகளே அடியேன் ஜனனமெடுத்தபயன் இப்போதேகிடைத்தது; யான்செய்த புண்ணியமே புண்ணியம்; பாக்கியமே பாக்கியம் என்று, சகலலோக பாபங்களையும் அழிக்கின்ற அரனையும், பக்தர்களின் இருதயகமலத்தை மலர்விக்கும் நாராயணனையும் கண்டு தெரிசித்தவுடனே முத்தனானேன். ஆதலினால் துணை எனக்கு இவர்களே என்று புகழ்ந்து மகிழ்ந்தான்.

அக்காலத்தில் நாராயணன் ஏ சுபத்திரபர்வத அரசனே! நீ துதித்ததுதிகளால் என் தலைவற்குந் திருப்தியாயிற்று, உனக்கு வேண்டிய வரங்களைத் தருகின்றோமென, உடனே மலையாசனும் ஆனந்தக் கடலிலமிழ்ந்தித் துதித்துநின்று சிவபிரான் திருவடியன்பினும் விரும்புவது மற்றுண்டோ என்று, சுவாமீ அடியேனைப் பொருட்படுத்தி விரும்பி அழைத்தது எற்றிற்கு என்றான்; அதற்கு விஷ்ணு யான் எடுக்கும் வாமனாவதாரநிமித்தம் வருந்தும் ஆதிசேஷனுக் குதவியாய்ச்சென்று பூமியைத்தாங்கவேண்டியதற்காக என்றார். அதைக்கேட்ட சுபத்திரன் பெருமானே! அங்ஙனமே தங்கள் உத்தரவின்படி செய்கின்றேன், ஆயினும் அடியேனால்

வேண்டப்படுவனவுள, அவற்றைக் கொடுத்தருள வேண்டும். யாவை எனின் இவ்வுலகத்தைச் சுமக்கும் ஆதிசேஷன், அட்டநாகம், அட்டகஜங்களுக்குக் கிடைத்திருக்கின்ற கீர்த்தி எனக்கும் உண்டாகவேண்டும், தங்களருளால் பலமுமதிகம்வேண்டும் என்றலும், கிரியே நீ புவனத்திரியென்னும் பெயரும்பெறுவாயென, பர்வதம் மகிழ்ந்து விஷ்ணுவே என்னால் சுமக்கப்படும் மத்தகத்தின் மேலிடத்துள்ள தலத்தில் சிவபிரானும் தாமும் எஞ்ஞான்றும் நிலைத்திருக்கவேண்டும்; அல்லாமலும் அவ்விடத்தில் பிரமன்முதலிய தேவர்கள், முனிவர்கள் மகிழ்ந்திருக்கவும், அரக்கர்கள், அசுரர்கள் இரண்டு யோசனைதூரம்வாராதிருக்கவும், ஆண்டுப் புண்ணிய நதி ஒன்று சேரவும்வேண்டும்; அன்றியும் என் சிரத்தில்வசிக்கும் சகலவுயிர்களையும் காலபாசம் பற்றாமலும், யாதொரு இடையூறுமுறாமலும் காக்கவேண்டும் சங்கரபதவியிலும், தங்கள் பதவியிலும் வாழச் செய்யவேண்டும்; எல்லாத் தலங்களிலும் இத்தலமே மேம்படவும், என்னையும் என் தானத்தையும் நினைத்தவர்க்குச் சகலசித்தியும், ஆங்குறும் நதியில் ஸ்நானஞ்செய்து சங்கரரையும், தங்களையும் தெரிசித்தவர்க்கு முத்திசித்திக்கவும்



வேண்டும் என்று பிரார்த்தித்தபடி கொடுத்தோமென்றுசொல்லி, விஷ்ணு கருடனைப் பார்த்து, இச்சுபத்திரனோடு சீக்கிரம் பாதாளஞ் சென்று ஆதிசேஷனிடம் தெரிவித்து, பயப்படாதே என்று கூறிப் பின் எங்கட்கு மருமஸ்தலமாயும், அநேகஸ்தலங்களாற் சூழப்பட்டதாயும், ஒன்றும் நிகரற்றதாயும், குய்யதீர்த்த (சமுத்திரம்)த்துக்குப் பாதியோசனைதூரம் மேற்கிலும், தில்லைக்குக் கால்யோசனைதூரம் வாயுதிக்கிலும், காவிரிக்கு யோசனைதூரம் வடக்கிலும், ஸ்ரீமுஷ்ணத்துக்கு ஒன்றரையோசனைதூரம் ஈசான்னியத்திலும், திருமுதுகுன்றுக்கு இரண்டரையோசனைதூரம் கிழக்கிலும், திருவைந்திரபுரத்துக்கு இரண்டு யோசனைதூரம் தெற்கிலுமுள்ளதாயும் இருக்கின்ற மேலானதலம் இன்னதென்று அறிந்துகொண்டு, சகலதேவர்க்கும், முனிவர் பெரியோர்களுக்கும் ஆதாரஸ்தலமாகிய அவ்விடத்தில் சர்வதீர்த்தரூபமான சுவேதநதியும் நம்முடைய உத்தரவினால் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு ஓடுகின்றமையால் அதன் வடகரையில் நாங்களிருவரும் அன்பர்கள் புருஷார்த்தமுத்திசித்திகளையடையக் கொடுக்கின்றோம் ஆதலால் அத்தானத்துக்கு அடிப்பாகத்தில்

இம்மலையை நிலைபெற்றிருக்கச் செய்துவைத்து விட்டு உடனே இவ்விடம் வருவாயென்று கட்டளையிட்டருளினார்.

அவ்வாறே கருடன் விஷ்ணு ஆஞ்ஞையை மேற்கொண்டு சீக்கிரம் மலையை அவ்விடங்கொண்டு போய் ஆதிசேஷனுக்குத் தெரிவித்துப் பூமியைத் தாங்கும்படி நிலைபெறத் தாபித்துப்பின்னர் மாதவனிடஞ்சென்று தெரிவித்தது; (ஆதலால் அதுமுதல் அம்மலையின் உச்சியிலிருக்கும் அத்தானத்திற்குப் புவனாசலமென்று பெயருண்டாயிற்று).

இவ்வளவு அற்புதங்களமைந்து மேலானதும் பாவவிமோசனஞ்செய்வதும், சிவபெருமான் மாதவன் இவர்களுக்கு மகிழ்ச்சி யுண்டுபண்ணத் தகுந்ததும், ஆன்மாக்களுக்கு ஞானத்தையீவதும், துதிசெய்யும் தேவர்க்குமுத்தியளிப்பதும் ஆகிய இப்புவனாசலமகத்துவத்தைப்படிப்போரும், கேட்போரும் மலரகிதராய்ச் சிவபதவியை யடைவார்களென்று சூதபுராணிகர் முனிவர்களுக்குக்கூறினார்.

---



## 2-வது வேதபுரிச்சருக்கம்.

இங்ஙனம் புவனாத்திரி வரலாற்றைக்கேட்ட முனிவர்கள் அகத்தியரைப்பார்த்து, ஏ முனிபுங்கவரே! முத்தியையளிக்கும் அற்புதம்வாய்ந்த கதையை நாங்கள்கேட்டதால் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவர்களானோம். மற்றைய நாமங்கள் இப்புவனாத்திரிக்கு வாய்த்தவகையும் கேட்க யாங்கள் யாவரும் அவாவுடையவர்களா யிருக்கின்றோம் என்றார்கள்.

உடனே அகத்தியர் சிவசரிதசிரவணத்திற்சிறந்த பரிசுத்தர்களாகிய முனிவர்களே! இரண்டாவது நாமம் வந்த வரலாறும் இப்பொழுது சொல்கின்றேன்.

முற்காலத்தில் கடல்புடைசூழும் இத்தாரணியின்கண் தேவர், முனிவர், கந்தருவர் இயக்கர் சித்தாதியரைத் துன்பப்படுத்துவோனும், திரிலோகத்தையும் தன் பராக்கிரமத்தால் தனதுரிமைக்குக் கொண்டுவந்தவனும் ஆகிய சோமுகன் என்கின்ற ஒரு பெரிய அசுரனிருந்தான். அவன்

ஒருகாலத்தில் இருக்கு, யஜுர், சாமம், அதர்வண மென்னும் வேதநான்கையும் கவர்ந்துபோய்ச் சமுத்திரத்திற்மூழ்கிப் பாதாளத்தில் ஒளித்துக் கொண்டான். அப்போது அந்தணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்கள் கர்மானுட்டானங்கள் கெடவும், யாகாதி கிருத்தியங்கள் கெடவும் வெகு காலம் கஷ்டப்பட்டனர். பின்னர்த் தேவர்கட்கும் பிதிர்கட்கும் முனிவர்கட்கும் பூசைமுதலியவைகள் நடக்காததால் தேவர்கள் யாவரும் கூடித் தீனதயாளுவாகிய விஷ்ணுவையடைந்து வேண்ட உடனே அவர் மற்சாவதாரம் எடுத்துக் கடலில் மூழ்கிப் பாதாளஞ்சென்று கோபத்தோடும் சோமுகாசுரனைக்கொன்று வேதங்களைக்கொண்டுவந்து பிராமணர்களிடம் சேர்ப்பித்து மறைந்தனர். பின் வேதநான்கும் அசுரசம்பந்தத்தால் அழுக்குடையேமாயினோமாதலால் நம்மை எவரும் விரும்பவில்லையென்று எண்ணி, தீர்த்தம், மூர்த்தி, தலம் இம்மூன்றிலும் உத்தமமான க்ஷேத்திரம் புவனுத் திரியே என்றுணர்ந்து, ஆண்டுச்சென்று, சுவேத நதியில் மூழ்கி, அத்தீர்த்தத்தால் அதன் வடகரையில் எழுந்தருளியிருக்கும் அரன் அரிகளுக்கபிஷேகித்து, வில்வதுளசித்தளங்களாலர்ச்சித்துத் துதி





த்து, வேதரூபமான விமானங்களைக்கண்டு அற்புதங்கொண்டு, அஞ்சலித்துத் தேவதேவரான சங்கர விஷ்ணுக்களைக்கண்டு ஆனந்த அன்புமிகுதியால் பின்னரும் தீர்த்தம், பால், தயிர், இளநீர், முக்கனி, கருப்பஞ்சாறு முதலியவற்றால் அபிஷேகித்து, மல்லிகை, கொன்றை, தாமரைமலர், வில்வம் துளசிகளால் அர்ச்சித்து, தூபதீபங்காட்டிப் பூசித்து, மிளகோதனம் தாம்பூலாதி நிவேதித்து வணங்கிக்கொண்டு சிலவருஷம் அத்தலத்திலே வசித்துத் தவஞ்செய்துவந்தன.

அப்போது தவஞ்செய்யும் வேதங்கட்கு முன்னர்த் தயாநிதியாகிய சிவபிரான் காளகண்டம் சதுர்ப்புயம் மான் மழு உடையராய், சர்மாம்பரராய், உமாதேவி சமேதராய், இடபாரூடராய் எழுந்தருளிநின்றார். விஷ்ணு குண்டலமணிந்த செவியராய், முத்தாபரணம், கௌத்துவமணி, சங்கு, சக்கரம், பீதாம்பரம் இவைகளை யணிந்தவராய், இலக்குமிசமேதராய், கருடாரூடராய் எழுந்தருளிநின்றார்.

அங்ஙனம் நின்ற இருவரையும் வேதங்கள் கண்டு மகிழ்ந்து பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்

கரித்துத் துதிக்கத்தொடங்கின; தேவதேவரே! தேவரிடம் அன்புள்ளவரே! அடுத்தோர்க்குக் கொடுத்தலில் கற்பகவிருக்ஷமும் புறங்கொடுக்கும்படி செய்பவரே! முனிவர்களாற் பூசிக்கப்படும் கமலபாதரே! எங்களால் துதிக்கப்படுகின்ற குணாதீதரே! என்றுசொல்லித்துதித்து நின்ற நான்கு வேதங்களை மகாவிஷ்ணுபார்த்து, சங்கரமூர்த்தியின் திருவுளப்பாங்கின்படி திருவாய்மலர்ந்தருளுவார்.

ஏ மறைகளே, எங்களைப் பூசித்துச் சேவித்த வகையால் சந்தோஷத்தை நாங்களடைந்தோம். ஆதலால் உங்களுக்கு வேண்டியவற்றைக் கேளுங்கள் தருகிறோம் என்றார். உடனே வேதங்கள் முன்போல் அந்தணாதி ஆனனங்களினும் யாகாதியிடத்தும் வியாபித்து விளங்குமாறும், தங்கள் திருவடிகளில் என்றும் மறவா அன்பு நிகழுமாறும் அருள்க என அதற்கு விஷ்ணு கூறுவார்:— ஆரணங்களே நீங்கள் ஈண்டுவசித்தலாலும், சுவேதநதியில் மூழ்கினமையாலும் உங்கட்குநேர்ந்த அசுரசம்பந்தம் நீங்கிற்று; சுத்தமுமானீர்கள். முன்போல் யாவரும்போற்றும் மகத்துவமும் வியாபகமும் உண்டாயிற்று.



என்று சொல்லிப் பின் பிரமாவைநினைக்க அவர் வந்து துதித்து நின்றார். அப்போது பிரமனைப் பார்த்து முன்போல வியாசரிடமிருந்து இந்த வேதங்களைப் பார்ப்பார் முனிவர் யாவரும் கற்றுணருமாறு செய்வி என்றுரைத்துப் பழமறைகளை நோக்கி உங்கட்கு வேறுவேண்டியவற்றைக் கேளுங்கள் என்றார். உடனே வேதநான்கும் இந்தத் தலம் நாங்கள் சுத்தியடைதற்கு ஏற்றதாயிருந்ததால் நாங்கள் ஒரு கலையோடு ஈண்டு வசிக்கின்றோம். அன்றியும், இந்த இடம் எங்கள்பேரால் விளங்கவும், எங்களை இவ்விடத்தில் உச்சரிப்போர்க்கு உங்களுடைய சாரூபம் கிடைக்கவும்வேண்டுமென, அங்ஙனம் தந்தோமென்று சொல்லி மூத்தேவரும் மறைந்தனர். அந்நாட்டொடங்கி வேதபுரி என்று அந்த க்ஷேத்திரம் சொல்லப்பட்டது.

பின்னர் மூன்றாவது வில்வாரண்யம் என்று பெயர்வாய்த்த சரிதமும்முனிவர்களே கேளுங்கள் என்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார்.

## 3-வது வில்வாரண்ணியச்சருக்கம்.

ஒருகாலத்தில் அளகாபுரியின்கண் சுமதன் என்னும் நாமம்பெற்ற ஓர் இயக்கன் உலோகாயதமதாரியனாய், ஆயிரம் பெண்களுக்கு ஓரே நாயக

னாய், தூர்த்தபானுவாய்த் திரியுமவன் ஒருநாள்
இமயமலைச்சாரலை யடைந்து அங்கேயுள்ள தா
மரைப்புஷ்பங்களால் நிறையப்பெற்ற ஒரு சுனை
யில் ஸ்திரீகூட்டங்கள் சூழ வஸ்திரமின்றி விளை
யாடிக்கொண்டிருந்தான். அப்போது துருவாச
முனிவர் அச்சுனையில் ஸ்நானஞ்செய்யவர, அவ
ரை இயக்கன்கண்டு கோபித்துப் போபோ என்று
சொல்ல அவனைப்பார்த்து, அடா, துஷ்டா! நீ
ஸ்திரீகளுடன் புத்தியின்றிச் சலத்திலிறங்கி வஸ்
திரமின்றி மானத்தைவிட்டுக் கெட்ட செய்கை
களைச்செய்கின்ற சண்டாளனே! என்னுடைய
ஸ்நானகாரியத்துக்கு இடையூறு செய்கிறது கெடு
வதற்கேற்ற குறியென்று சொல்லிக்கொண்டு தடா
கத்திலிறங்கினார். அதைக்கண்ட இயக்க தூர்த்
தன் கோபத்தோடு அம்முனிவர்மேல் ஜலத்தை
வாரியிறைத்துக் குழப்பினான். உடனே துருவாச
முனிவர் அதிககோபங்கொண்டு கடுஞ்சாபமிடு
வார்:— அடே மூடா! நீ எனக்கு இடையூறு
செய்ததால் ஸ்திரீசுகத்தையிழந்து வேட்டுவஜென்
மமெடுத்து அலைவாயென்றுரைத்தனர். அக்கண
மே அந்த இயக்கன் வேடனாய் வருத்தப்படுவ
தைக்கண்ட ஸ்திரீகள்பயந்து தங்களிடத்திற்குச்



சென்றார்கள். பின் வேடன் மலை, காடு, நாடு
எங்கும் அலைந்து செய்வது இன்னதென்று கிஞ்
சித்து மறியாமல் கவலைக்கடலமிழ்ந்தி, ஆகாராதி
யின்றி எங்குஞ் சுற்றிவரும்போது, ஓரிடத்தில்
அநேகரிஷிகூட்டங்களைக்கண்டு நமஸ்கரித்து, சுவா
மிகளே! மூடனாகிய ஏழையை ரக்ஷித்தருளவேண்
டுமென்று வணங்கிக்கொண்டு பிரார்த்திக்குமவ
னைப்பார்த்துப் பெரியரிஷியாற் கொடுக்கப்பட்ட
கடுஞ்சாபம் எங்களால் நிவிர்த்தியாகாது; அவரிட
மேபோய்வேண்டிக்கொள் என்னலும், கேட்டுவருந்
தித்தேடிக் கோபவேந்தாயும், நீறணிமேனியுடன்
சிவசிந்தனை, சிவபூஜை, மாதவம் புரிபவராயும்,
சடைமுடியாயுமுள்ள அத்துருவாசனையடை
ந்து, கிருபாநிதியே! தீனதயாளுவே! கொடிய
தமியேன் விவேகமின்றி, மதம்பிடித்துச்செய்த
செய்கையை மன்னித்து இரக்ஷித்தருளவேண்டும்.
சாபத்தை நிவிர்த்திசெய்யவும்வேண்டும். என்று
வேண்டிய இயக்கனைத் துருவாசர் பார்த்து, ஏ
இயக்கனே, நீ இனிச் சாதுசங்கத்துக் கேற்காத
கீழ்ச்செய்கைகளைக் கைவிட்டு, அச்சங்கசகவாசி
யாய்வருவாய். நிற்க, நாம் கொடுத்தசாபம் அநு
பவித்தே தீரவேண்டும். ஆயினும் ஒருபாயஞ்

சொல்கிறோம். கேட்பாயாக. என்னெனில், என் சாபவிமோசனம் ஆவதும், உத்தமரகசியமானதும், தேவர் முனிவர் சூழ்வதுமான இடம் ஒன்று இப்பூவுலகில் தென்றிசையில் வெள்ளாற்று வடகரையில் நினைத்தவுடன் பாவமறுக்கும் புவனாசலமென்றுபெயர் கொண்டதாயுளது; ஆண்டு நீ சென்று அங்கெழுந்தருளியிருக்கும் வேதபுரீசுரரைத் தினமுங் கோடி வில்வதளங்களால் அருச்சித்துப் பூசித்தால் இச்சாபம் நீங்கி முன்னறிவும் நற்செனனமும் பெற்றுச் சுத்தனாவாய். என்றுரைத்த துருவாசர் வார்த்தையைக்கேட்ட அக்கணமே அம்முனிவரை நமஸ்கரித்து உத்தரவுபெற்றுக்கொண்டு ஆண்டுநீங்கித் தேடிப்புவனாசலஞ் சேர்ந்தான்.

அங்ஙனமே சேர்ந்து வேதநதிமூழ்கி எழுந்தான். எழுந்தவுடனே தன்னைப்பற்றிய சாபமும், பாவமும், மும்மலமுமொழிந்து சுத்தனாய், முன் இயக்கவடிவினனாய் மகிழ்ச்சியோடு வேதபுரீசுரர் சந்நிதியையடைந்து, நமஸ்கரித்து, எழுந்து திரிகாலமும் வேதத்தாலருச்சிக்கப்படும் அம்மூர்த்தியை மூவாயிரம் வில்வதளங்களால் அருச்சித்து, அப்படியே கோடிசங்கியையாகிறவரையும் பிரதி



தினமும் இவ்விதம் பூசைசெய்ய எண்ணி, சுவேத நதியில் ஸ்நானஞ்செய்து, வில்வத்துக்காகத்தினம் ஐந்துமைல்தூரம் போய்க்கொண்டுவந்து அருச்சித்துவருங்கால், ஒருநாள் கடவுள் எங்கும் வில்வங்கிடைக்காவண்ணஞ்செய்ய, அலைந்து அலைந்து பார்த்து வருந்திப் பூசை எவ்வாறு செய்வது என்றெண்ணி ஏங்கி, ஜலத்தை விரும்பிக் கிணறு வெட்டப் பூதம்புறப்பட்டதுபோல முனிசாபத்திற்குப் பரிகாரமாக வில்வார்ச்சனை நியமமாய்ச் செய்ய ஏற்பட்டு இப்போது வில்வங்கிடைக்காது நியமந்தவறுதல் ஏற்பட்டுச் சிவாபராதம் நேர்ந்ததே அதற்குப் பிராயச்சித்தம் எதிலுஞ் சொல்லவில்லையே! சூரிய சந்திரருள்ளமட்டும் வினை நீங்காதே என்றழுதாற்றி நைந்து பின்னர் யாவற்றிற்கும் கடவுள் துணையன்றி வேறென்னவென்று வேதபுரீசுரர் சந்நிதியடைந்து, சர்வேசா! சகல சகாதாரரூபா! பராசக்திநாயகா! சங்கரா! வேதாந்த சித்தாந்த சொரூபா! காலகாலா! சூலபாணீ! பாலநேத்திரா! விஷபோஜனப்பிரியா! காளகண்டா! கர்மநாசா! பிரணவரூபா! பஞ்சபூதலோக[illegible]ணா! சர்ப்பாபரணா! பிரமன்மால் காணாச்சுடர்[illegible]ப்பாதா! தக்கயாகசங்காரா! லோகநாதா!

மீனாக்ஷி சமேதவேதபுரீசா! அர்த்தநாரீசுரா! விஷ்
ணுநேத்திரகமலார்ச்சனசரணா! கோடிசூரியப்
பிரகாச ஜடாதரா? மாயாபதீ! அஷ்டமூர்த்ததே
வா! சோமாஸ்கந்தா! கணபதி சுப்பிரமணியரிரு
வரும் இரண்டுபாங்கரும் இருக்க வீற்றிருப்பவ
னே! கொன்றைமலர்சூடீ! நான்குவேதங்களையுங்
குதிரையாகக்கொண்டோய்! லோகரூபா! பிரமன்
சாரதியாகவும், விஷ்ணுபாணமாகவும், வாசுகிநா
ணாகவும், மேருவில்லாகவுங்கொண்டு திரிபுரசங்
காரஞ்செய்ததேவனே! குபேரனது தோழனே!
முனிவர்கூட்டங்களாற் பூசிக்கப்படும் பாதாரவிந்
தங்களையுடையவனே! வேள்விநாதா! சப்தகோடி
மந்திரசொரூபா! பஞ்சாங்ககாலவருஷரூபா! ஆத்
மநாயகா! பாவநாசா! அதியுக்கிரபாவ விருக்ஷத்
திற்குக் கோடரிபோன்றவனே! என்று தோத்
திரித்தான்.

இவ்வாறு தோத்திரஞ்செய்யும் வேடன்
முன்னர்ச் சந்திரமுடியும், நெற்றிக்கண்ணும்,
புன்னகைமுகமும், கோடிசூரிய சடாபாரமும்,
சருப்பாபரணமுங்கொண்டு, இடபவாகனரூடராய்
மீனாக்ஷியம்மை இடப்பாலுற வேதபுரீசுரர்



வெளிப்பட்டுநின்று, ஏ இயக்கர்தலைவனே! நீ அன்
போடும் மகிழ்வோடும் தோத்திரித்தலால் சந்தோ
ஷமுற்றோம்; உனக்கு வேண்டியவற்றைக்கேள் தரு
வோம் என்றலும், இயக்கன் அஷ்டாங்கபஞ்சாங்க
நமஸ்காரஞ் செய்துநின்று, சுவாமீ!
அடியேன் சாபவிமோசனனாய், முன்போல் ஸ்திரீ
சமூக லீலாவிநோதனாய் வாழவும், குறைவான
வில்வதளபூசை நிறைவுறவும், தங்கணங்களுள்
ஒருவனாகவும் அருள்வாய் என்று பிரார்த்தித்தான்.

அப்படியே சிவபிரானும் அவனைநோக்கி, பக்
தனே! எல்லாம் உனக்குக் கொடுத்தோம்; உன்
னிஷ்டப்படி வில்வதளங்கள் கிடைக்கும்படியுஞ்
செய்தோம்; நீ இனிப்பூசையை உன்மனம்போல
முடித்து, அம்மைக்கும் எனக்கும் மனமகிழச்செய்
தபின்னர் நம்முடைய கணவருக்கத்துள் உன்னைச்
சேர்த்துவிடுகிறோம் என்று திருவாய்மலர்ந்தரு
ளிப் பின்னும், உன்னாலே தோத்திரிக்கப்படும்
தோத்திரங்களை யாரொருவர் நமது சன்னிதானத்
தில் நின்று துதிக்கிறார்களோ அவர்கள் மகாபாத
காரனாலும் சுத்தராய்ச் சர்வசித்தியும் பாக்கியமும்

பெற்று நெடுநாள்வாழ்ந்து, இறுதியில் நமது திருவடிநீழலை யடைவார்கள் என்று கூறி மறைந்தருளினார்.

அவ்வாறே இயக்கன் திருவருளின்படி சிவபூசைசெய்து கடைசியில் சிவகணமாய்ப்போய் வாழ்ந்திருந்தான். அந்த இயக்கனுக்காகக் கடவுள் வில்வவிருக்ஷங்களை நிறையச்செய்ததால் அந்தத்தலம் வில்வாரண்யம் என்று ஒரு திவ்வியநாமத்தையடைந்தது.

## 4-வது ஆதிவராகநத்தச்சருக்கம்.

அகத்தியமுனிவர் இனி உமக்கு நான்காவது பெயர்வந்த வரலாற்றையும் சொல்கிறேன் கேளும் என்று எல்லாருடைய முகத்தையும் பார்த்துக் கூறுவார் எனச் சூதபுராணிகர் சௌனகாதியர்க்குக் கூறுவார்.

பூர்வகாலத்திலே இரணியாக்கன் என்பவன் உலகங்களை இம்சித்து, தேவர்களை வருத்தி, அசுரர்களைக் காப்பவனாய், ஒருசமயம் பூமியைத்தூக்கிக்கொண்டு சமுத்திரத்தில் மூழ்கிப் பாதாளத்திலேபோய்வசித்தான். அப்போது அநாதரக்ஷக



ராகிய ஸ்ரீநாராயணன் வராகாவதாரத்தோடு பூமிக்குட்சென்று பாதாளத்துள் அவனைக்கண்டு வதைத்துப் பூமியைத்திருப்பிக்கொண்டுவந்து சேர்த்துவிட்டுத் தனக்கு வாசஸ்தலமாகிய புவனாசலமுற்று வாழுங்கால், அண்டக்கண்ட பிரமாதிதேவர்கள், வராகாவதாரமூர்த்தியாய்வந்து அசுரசங்காரஞ்செய்து எங்களை ரக்ஷித்த மாதவராகிய பிரானைப் புவனாசலத்திலே துதிக்கவேண்டும் என்று வந்து சன்னிதியில் நின்று, தேவதேவா! வியாபகா! உபநிஷத்துக்களால் துதிக்கப்படுபவரே! அடியேங்களின் அஞ்ஞானத்தை யொழிக்கும் இருதயகமலா! என்று பிரமனும், சுவர்க்க வைகுண்ட சத்திய லோகங்கட்கதிபதியே! புருஷார்த்தங்களை எங்கட்கு ஈயும் வள்ளலே! வேதங்களால் அறியத்தக்கவரே! உந்திக்கமலா! புருஷோத்தமா! வராகாவதாரபகவா! என்று இந்திரனும், அக்ஷரசொரூபா! பூமகள்நாதா என்று அக்கினியும், பஞ்சாயுதபாணீ! வராகத்தினடியால் மலைகளை நசிக்கச்செய்பவரே! என்று வருணனும், பாதமுழங்கால்வரையில் சொர்ணசொரூபி! அதற்குமேல் உந்திவரை சுவேதரூபி!' அதற்குமேல் கண்டம்வரை அருண

சொரூபி! அதற்குமேல் சிரமீருக நீலசொரூபி! என்று வாயுவும், சமுத்திர நீர்முதல் சகலதீர்த்தப் பிரகாச கேசவா! அரதனுபரண அலங்காரா! ஐம்பதுகோடியோசனை பூமியைக் கோரப்பல்லால் வெளுப்பாகச் செய்பவரே! என்று குபேரனும் மற்ச கூர்ம வராகாதிய சொரூபா! என்று தேவர் முதலியோரும் துதித்தார்கள்.

அங்ஙனம் துதித்தவற்றை வராகமூர்த்தி கேட்டு மகிழ்ந்து தேவர்களே! உங்கள் துதியால் மகிழ்ந்தோம். இந்தத்தலம் மேலானதென்று நீங்கள் தோத்திரஞ்செய்தலால் நாம் எப்பொழுதும் இங்கேயே இருப்பேம். இந்த இடம் ஆதிவராகநத்தம் என்னும் பெயராலும் விளங்குக; நமக்கு ஸ்ரீமுஷ்ணமும் புவனகிரியும் அவதாரஸ்தலம்; ஆதலால் அவதாரஸ்தலமாகிய இந்த ஆதிவராகநத்தத்திலே யார் நம்மை இத்துதிகளால் துதித்தாலும் வைகுண்டஞ்சேர்வர்; அதுமாத்திரமோ வெறுப்புவரும்வரையில் இவ்வுலகில் வாழ்வார் என்றருளி மறைய மற்றைத்தேவர்களும் உத்தரவுபெற்றுப் போனார்கள். அதுமுதல் இது ஆதிவராகநத்தம் என்றும் பேர்வாய்ந்தது.





## 5-வது பஞ்சக்குரோசச்சருக்கம்.

சூதமுனிவர் முனிவர்களைப்பார்த்துச் சொல்லுவார்.

இந்தப் புவனாசலத்துக்கு நாலுபக்கத்திலும் ஐந்துகுரோசதூரத்துக்கு அதிகமான இடத்திலும், அக்கணக்குக்கடங்கிய எல்லைக்குள்ளும் அநேகதலங்களிருந்தாலும் இப்புவனாசலமே ஐந்துகுரோசதூரம் வியாபித்து விளங்குதலாலும், அத்தலத்தில் பஞ்சமகாபாதகங்களைச் செய்வோருக்கும் அத்தலத்துக்கு ஐந்துகுரோசதூரம் வரையில் யமபயமின்றிச் சிவசாயுச்சிய பதவி சித்திக்குஞ் சிறப்புப் பெறுதலாலும் பஞ்சக்குரோசம் என்னும் நாமம் பெற்று உலகமுற்றும் விளங்குகின்றது. ஸ்ரீ முஷ்ணம் விருத்தாசலம், சிதம்பரம், திருவைந்திரபுரம் இவைகள் நாலுபக்கமுமிருக்க நடுவில் இப்புவனகிரியிருப்பதா[illegible]யர் பெறும் என்று எடுத்துச்சொல்லி சூதமுனிவர் முனிவர்களைச் சிரவண[illegible]றுமாறு செய்வித்தார்.

179495

## 6-வது பாஸ்கரநகரச்சருக்கம்.

எல்லாவற்றையும் அறிந்த எந்தையே! நீர் எங்களுக்குப் புவனாசலத்தின் மகிமைகளை எடுத்துரைத்தலாற் பேரானந்த முறுகின்றோம். வராகபுரம் பஞ்சக்குரோசம் என்னும் இரண்டு பெயர்களின் காரணசரிதம் உணர்த்தியவாறே பாஸ்கரம் என்னும் பெயர்பெற்ற சரிதமுங்கேட்க அவாவுடையேம் என்று பிரார்த்திக்க முனிவர்கட்குச் சூதர் அப்படியே கூறுவார்.

இப்பொழுது சொல்லப்போகும் பாஸ்கரம் என்னும் பெயரை உச்சரித்தமாத்திரத்தில் எல்லாப்பாவங்களையும் ஒருங்கே போக்கலாம். ஆதலால் அத்துணைச் சிறப்புவாய்ந்த சரிதத்தை இதுவரையும் கேட்டிராத உங்களுக்குச் சொல்கின்றேன். அதனைச் செம்மையாகக்கேட்டுச் சிறப்படைவீராக. ஆறுவது பெயராகிய பாஸ்கரநாமம் இரண்டுகாரணங்களால் இத்தலத்திற்குக் கூறக்கிடக்கின்றது. அவற்றுள் முதற்காரணமாவது.

முன்னொருகாலத்தில் சூரியன் துவட்டா என்னும் ஓரசுரனுடைய குமாரியை விவாகஞ்



செய்துகொண்டு இன்பத்தை அநுபவிக்குங்கால், அவன் மனைவி தன்புருஷனுடைய ஆயிரங்கிரணங்களின் வெப்பத்தைச் சகிக்கமுடியாமற் பயந்து ஓடி மேருமலையின்கணுள்ள ஒருகுகையை யடைந்தாள்; உடனே சூரியன் தன் பத்தினியைக்காணாமல் எங்கும் தேடிப்பார்த்துவிட்டு ஒருநாள் மகா மேருமலையின் சமீபத்திற்போகும்போது மிக உக்கிரமான தவஞ்செய்தலைப்பார்த்து மோகித்துக்கிட்டப்போக, மனைவி நாயகனுடைய காந்திக்கு ஆற்றாமல் குதிரையுருவமாய்த் தந்தையிடஞ்சேர்ந்தாள். சூரியனும் அவளைப் பின்றொடர்ந்து மாமனாரிடம்போக அவனதனையறிந்து மருமகனைச் சாணையிற்கொடுத்துக் கடைந்தெடுத்தனர். எடுத்ததும் சூரியனுடைய சரீரத்தினின்றும் அக்கினிப்பொறிகள் அநேகம் பலவிடங்களில் விழுந்தன. அங்ஙனம் விழுந்தவிடங்கள் முழுவதும் பாஸ்கரநகரம் என்றே சொல்லப்படும். அவ்விடங்களுள் இப்புவனகிரியும் ஒன்றே. இதற்கும் அதனால் பாஸ்கரம் என்னும் நாமம் வந்தது. இச்சிறப்புவாய்ந்த இடத்தில் யாவரேனும் தானம், செபம், ஓமம் முதலியனசெய்வாரேல் செய்யப்படும் ஒன்றுக்குக் கோடிபலன்கிடைக்கும்.

மோக்ஷசாதனஸ்தலமுமாம். அஃதன்றியும் தேவர்கட்கு வாசஸ்தானமுமதுவாகும். மற்றொரு காரணமாவது எந்தவிடத்தில் பெரியநதிக்குத் தெற்கே, அல்லது ஆக்கினேயத்தில் பெருமைபொருந்திய க்ஷேத்திரமிருக்கின்றதோ, அதற்கு வடகரையில் சிவக்ஷேத்திரமாவது விஷ்ணுக்ஷேத்திரமாவது இருந்தால் அவ்விரண்டுதலமும் பாஸ்கரம் என்று சொல்லப்படும். ஆகவே சுவேதநதியின் ஆக்கினேயத்தில் தில்லையாகிய சிவஸ்தலமிருக்க அதற்கு வடகரையில் இப்புவனாசலம் சிவாலய விஷ்ணுவாலயங்களைக் கொண்டிருத்தலால் இதற்குப் பாஸ்கரம் என்னும் பெயர்வந்தது. இருவகைக்காரணங்களுமிவையே.

## 7-வது தேவநகரநாமச்சருக்கம்.

இனித் தேவநகரநாமவரலாறுஞ் செப்புகிறேன். முற்காலத்தில் பொன் வெள்ளி இரும்பு என்னும் இம்மூன்று லோகங்களாகிய மதில்களாற் சூழப்பட்ட மூன்று நகரங்களையுடையவராய் அந்த நகரங்களோடு புறப்பட்டுத் தேவலோகமுதலிய மேலுலகஞ்சென்றும் இன்னும் மற்றையிடங்கட்குப் போயும் தேவகாரிய பிதிர்காரியங்கட்கு விக்



கினம்பண்ணியும், யாகாதிகளையழித்தும் உலகங்களையெல்லாம் துன்பப்படுத்திக்கொண்டு வருபவர்களாய்க் கொடுங்கோலரசு செய்துவரும் துஷ்டர்களான தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் மூன்று அசுரர்க்கும் பயந்துவருந்துந் தேவர்கள் யாவரும் பிரமதேவரிடஞ்சென்று பிரார்த்திக்க, அவர் தேவர்களைப்பார்த்துப் பயப்படாதேயுங்கள். அவ்வசுரர்கள் வரத்தகாத மகிமை வாய்ந்ததும், அரன் அரி இருவரும் நமக்கேற்ற தலமிதுவென்று துணிந்து எஞ்ஞான்றும் வீற்றிருப்பதும், கொடிய இராக்கதர் அசுரர் முதலிய துஷ்டர்கள் யாவரும் தன்னிடம் வாராதிருத்தற்குத் தக்கவரத்தை அரனரிகளிடம் பெற்றுவந்திருப்பதுமாகிய புவனாத்திரியென்னும் நாமம்பூண்ட தலமொன்று பூலோகத்திலிருக்கின்றது.

இன்னும் அங்குப்பாவங்களை நசிக்கச்செய்யும் ஸ்நானச்சிறப்புடைய சுவேதநதியும் தெற்கருகே ஓடுகின்றது. ஆகையால் நாமெல்லாம் அங்கேபோவேம் என்று பிரமதேவர் கூறுதலும், அவ்வண்ணமே தேவர்கள் எல்லாரும் அவரை வணங்கி, அவருடன் கூறப்பட்ட புவனாத்திரிதலஞ்

சென்று சுவேதநதி மூழ்கிப் பின் வில்வாரண்ணியமென்னுமத்தலத்திற்போய், வில்வதளஞ் சேகரித்துவந்து பரமசிவனையும் துளசியால் விட்டுணுவையும் பூசித்துத் துதித்து அச்சமகற்றி அகமகிழ்ந்து ஆனரிகளின் திவ்விய சரித்திரங்களைக்கேட்டுப் பொழுதுபோக்கிக்கொண்டு நெடுநாள் அங்கேயே வசித்துவந்தார்கள். அங்ஙனம் நாடோறும் ஸ்நானம் பூஜை தோத்திரஞ் செபதபங்களைச் செய்துவருவதால் தங்கள் சொர்க்க சத்திய உலகங்களுக்கும் போகவேண்மென்கிற எண்ணமே நிகழாமல் மறந்துவந்திர்கள்.

பின்னர்ச் சித்திரைமாதத்தில் மகாவிஷ்ணுவுக்குப் பத்துநாட் பிரமோற்சவஞ் செய்தார்கள். மாசிமாதத்திலும் ஒன்பதுநாட் பிரமோற்சவஞ் செய்து பத்தாநாட்பூரணையில் இலக்குமியையும் பெருமாளையும் நவரத்தினங்களாலலங்கரிக்கப்பட்ட ஊஞ்சல்விமானத்தில் எழுந்தருளுவித்து வேதாத்தியயனத்துடனும், வாத்தியகோஷத்துடனும் யாவரும் சமுத்திரதீரஞ்சென்று, விட்டுணுதேவர் தீர்த்தமாடியபின்னர்த் தாமுமாடிப், பால், தயிர், நெய், சந்தனம் முதலியவைகளாலபிஷேகித்துத்



தீபதூபங்காட்டி, சர்க்கரைப்பொங்கல் முதலிய சித்திரான்னங்களை நிவேதித்துச் சுவாமிசன்னிதியிற்சென்று பூசித்துத் துதித்துச் சுவாமீ! இவ்வாறு எவர்கள் இம்மாசிமாதத்தில் உம்மை எழுந்தருளுவித்து, உற்சவநடாத்திப் பூரணையிலன்று இதுபோல் உம்மைக்கொண்டுவந்து உம்முடன் ஸ்நானஞ்செய்து, உம்மைத்துதிக்கும்பேறு பெறுகிறார்களோ, அவர்கள் மும்மலங்களினின்றும் விடுபட்டு உம்முடைய திருவடியையடையவேண்டுமென்று பிரார்த்திக்க, அது கேட்டவிட்டுணு தேவர்களைப்பார்த்து அப்படியே கொடுத்தோம். இன்னும் இன்றைக்கு நாம் அதிக சந்தோஷம்பெற்றோம், இவ்விதமே வருஷந்தோறும் இத்தினத்தில் இவ்விடம்வந்து தங்கிய அடியார்கட்கு வேண்டும் வரங்களைக்கொடுத்து எந்நாளும் மகிழ்விப்போம், யார் நம்மை வராகாவதாரமூர்த்தியென்று உணர்ந்துவந்து பூசித்துத் துதிப்பார்களோ அவர்கள் சகலபாவமுமகற்றி இறுதியில் நம்பதவியடைவார்கள். யார் இச்சமுத்திரத்தில் இற்றைநாள்வந்து மூழ்கி நம்மைத்துதித்தாலும் அவர் முத்தரே. யார் நமக்கு இவ்விடத்தில் அபிஷேகித்து நிவேதித்துப் பூசிக்கிறார்களோ அவர்

கள் இவ்வுலகத்தில் எல்லாவின்பங்களையும் அனுபவித்து முடிவில் நமது சாரூப்பியமடைவார்கள். இவ்விடம் எனக்காகத் தானம், யாகம், செபம், தவஞ்செய்தாலும் கோடிமடங்காகவளர்ந்து பலனைத்தரும் என்று கூறியருளி மறைந்தார்.

உடனே தேவர்கள் அதைக்கேட்டுப் பேரானந்தமுற்றுச் சுவாமியை ஆலயத்தில் எழுந்தருளுவித்து மகிழ்ந்து வருஷந்தோறும் அப்படியே செய்துவந்தார்கள். இங்ஙனம் எங்களுடைய தலங்களைவிட மேலானதும் எல்லாவரங்களையுந் தருவதுமான இப்புவனகிரிமகிமையைச் சொல்ல நம்மால் இயலாது என்றும், திரிபுரவசுரர்கள் நம்மைத் தொடரத்தக்க இடம் அல்லாதது இது என்றும், நாமெல்லாம் வசித்தற்கு ஏற்றதலம் இதுவாதலால் இதற்குத் தேவநகரம் என்னும் பெயர்வந்தது என்றும் சொன்னார்கள். அன்றுமுதல் அப்பெயரே வழங்கப்படுகின்றது. இந்த ஏழுநாமங்களையும் யார் காலை மாலை சொன்னாலும் அச்சமகல்வீர். இந்த ஏழுநாமங்களும் ஏழு ஜன்மங்களின் பாவங்களைநீக்கும். ஏழு முனிவர்களின் வரங்களையும் தெரிசனத்தையுங் கொடுக்கும். புலவர்க



ளாற் புகழத்தக்கதுமாகும். இயமபயத்தையும் போக்கும். கேட்டவுடன் பாவவிமோசனம் உண்டாகும். நினைத்தாலும் சொன்னாலும் மோக்ஷத்தையடைவார்கள்.

## 8-வது தலவிசேடச்சருக்கம்.

உலகங்களை எல்லாம் காத்தருள்புரிகின்ற சிவபெருமானிடத்தில் அன்புபூண்டொழுகுகின்ற மாதவம்பூண்ட முனிவர்பெருமானே! இத்தலத்திற்குரிய ஏழுநாமங்களின் காரணவைபவங்கள் முழுவதையும் நீர் சொல்லக்கேட்டு மகிழ்வடைந்தேம். இன்னும் இத்தலத்தின் மாகாத்மிய விசேடங்களையும், மற்றைத் தலங்களைவிட்டு இத்தலத்தில் வசித்து எவர்கள் முத்தியடைந்தவர்கள்? எவர்கள் பிரமஞானம், சம்பத்துமுதலிய அடைந்தவர்கள்? இத்தலத்தில் என்னசெய்தால் பாவநாசம் உண்டாகும்? என்பவைகளையும் சொல்லல் வேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமுனிவர் சொல்லுவாராயினார்.

முனிவர்களே! புண்ணிய சரிதங்கேட்பதில் மிக்க அவாவுடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்பது இதனால் தெரிகிறது. இந்தப்புவனத்

திரியைப்போல் எந்தவுலகத்திலும் கிடையாது.
உத்தமகுணங்களெல்லாவற்றுடனுங்கூடியது. எல்
லாமங்களங்களையும் யார்க்கும் எளிதிற்கொடுப்
பது. பதிதர் பஞ்சமகாபாதகர், வஞ்சகர், மாபாவி
கள், குருமனைவியைப்புணர்வோர், தாயைப்புணர்
பவர் பிறர்பொருள் கவர்வோர், பிறர்மனைவிழை
வோர், பரான்னம்புசிப்போர், நம்பிக்கைத்துரோ
கஞ்செய்வோர், மதுபானஞ்செய்வோர், தேவ
பூசை செய்யாதவர், பொன்திருடுவோர், நித்திய
கருமம் விடுத்தோர், பெரியோரை நிந்திப்போர்,
பொறாமையுடையோர், தேவநிந்தகர், தாய்தந்தை
முதலியோரைக்கொன்றவர், மனைவிமக்கள்மாடு
இவைகளைக்கொன்றவர், சிசுவைக்கொன்றவர், பிரா
மணரைநிந்திப்போர், நட்பினரை வஞ்சிப்பவர்,
அன்னம், கறி, பக்ஷணம், எள்ளு, அரிசி, உளுந்து
எண்ணெய், நெய், வேதம் இவைகளைவிற்பவர்,
கிணறுகட்டல் குளம்வெட்டல்முதலிய தருமகாரி
யங்களைக்கெடுப்போர், அபிசார ஓமஞ்செய்வோர்,
பந்திவஞ்சனைசெய்வோர், விஷத்தைக்கொடுப்
போர், வீட்டில் தீவைப்போர், சோரர், பொய்
யர், பெருவியாதிமுதலிய கர்மவியாதியாளர், அநா
தர், இன்னும் அனேகமான கெட்டநடக்கையுள்



ளோர், முதலானவர்களுக்கெல்லாம் இத்தலம்
தெரிசிக்க முத்தியளிக்கும் என்பதிற் சந்தேகமே
யில்லை.

இப்புவனசலத்திற்குப் போகவேண்டுமென்
றுசொன்னாலும் நினைத்தாலும் சிவன்முத்தனு
வன். அவ்விடம்வசிப்போர் முற்றுணர்ந்தோரே.
எவர் அந்த க்ஷேத்திரமுற்றாலும் அவர் புண்ணிய
புருஷரே. ஆதலால் அத்தலயாத்திரை பாவபாச
நாசஞ் செய்யக்கூடியது. நரகவேதனைக்கும், பா
வத்துக்கும் பயந்தோர் அவசியம் அத்தலத்தைய
டையவேண்டும். எவர்கள் தெய்வாநுக்கிரகத்தால்
இப்புவனைத்திரியை அடைந்து சரீரபந்தமாகிய
மும்மலவெப்பந்தணியச் சுவேதநதியில் மூழ்கிப்
பானஞ்செய்து நிழலுக்காக வசித்து ஆலயஞ்
சென்று அரனரிகளைத் தெரிசிக்கின்றார்களோ அவ
ர்கள் உடனே மலமுத்தர்களாய் இறுதியில் விமா
னவழியாகத் தேவர்கள்சூழத் தங்களிஷ்டப்படி
பிரமலோகமோ வைகுண்டலோகமோ அங்குச்
செல்வார்கள். எவன் அன்போடு விதிதவறாமல்
சுவேதநதி மூழ்கி வேதபுரீசரை மூன்றுவில்வ
தளங்களாலருச்சிக்கிறானோ அவன் சிவலோகத்
தில் மூன்று கற்பகாலம்வரைவாழ்வான். எவன்றற்

றெட்டு வில்வதளங்களாலருச்சிப்பானோ, அவன் பிரமபிரளயாந்தம் சிவலோகம்வசிப்பான். எவன் ஆயிரத்தெட்டு வில்வதளங்களால் அருச்சனைசெய்வானோ அவன் சிவசாயுச்சியமடைவான்.

எவன் நியமத்தோடு சுவேதநதிமூழ்கிச் சனிவாரத்தில் மகாவிஷ்ணுவைத் துளசியாற் பூசிக்கின்றானோ அவன் தேவர்களோடு வைகுண்டம் வாழ்வான். அன்றியும் விசாகநட்சத்திரத்திலே வெள்ளாற்றில் ஸ்நானஞ்செய்து, துளசியாற் பெருமாளைப்பூசித்தால் பிரமபிரளயாந்தம் வைகுண்டம்வாழ்வான்; அங்ஙனமே திருவோணநட்சத்திரத்தில் பூசித்துப் பாயசம், அதிரசம் ததியோதனம் முதலிய நிவேதித்து ஆராதித்தால் தாசர்களோடு வைகுண்டம் வசிப்பான். அவ்வாறே ஏகாதசியில் துளசியாலருச்சித்துப் பூசித்தால் விஷ்ணுசாரூப்பிய முறலாம் என்பதிற் சந்தேகமில்லை. புலரியிலெழுந்து நித்தியகருமமுடித்துத் தலநாமங்கள், மூர்த்திநாமங்களைச்சொல்லிச் சங்கற்பஞ்செய்து வெள்ளாறுமூழ்கி, விதிப்படி சந்தியாவந்தனஞ்செய்து, அந்நதிதீரத்திலேயே காயத்திரியைச் செபிப்பவன் சூரியமண்டலம்போய்வாழ்



வான், யாவனொருவன் சுவேதநதியில் ஸ்நானஞ்செய்து அன்போடு விதிப்படி அர்க்கியத்தை ஆறுக்குக் கொடுக்கிறானோ அவனுஞ் சூரியலோகமுறுவான். எவன் ஒரு முகூர்த்தகாலம் புவனசலத்தில் வசித்தாலும் அவன் நக்ஷத்திரமண்டலம்போவான். அங்கே ஒருநாள் வசித்தால் சுவர்க்கலோகமும், மூன்றுநாள்வசித்தால் சத்தியலோகமும், ஒருமாசம் வசித்தால் வைகுண்டமும், ஓராண்டுவசித்தால் முத்தியுமடைவான். இத்தலத்தில் வாழ்வோர்க்கு யமவேதனையும், மறுசனனமுமில்லை. அங்குள்ள சகலசீவர்களும் எல்லாவற்றுக்கும் மேலானவுலகத்தையடைவார்கள். அங்கே ஔபாசனஞ்செய்வோன் இறுதியில் சூரியமண்டலத்தையும், அக்கினிஹோத்திரஞ்செய்வோன் சத்தியலோகத்தையும், சோதிட்டோமமாதியாகஞ்செய்பவன் சகலலோகங்களையும் அடைவான். எவன் அங்கே ஒருபிடியரிசி பிராமணனுக்குக் கொடுக்கின்றானோ அவன் மறுபிறப்பிற் சக்கிரவர்த்தியாவான். ஒருகவள அன்னம் அந்தணனுக்குக்கொடுத்தால் நட்சத்திரவடிவமாவான்.

அங்கே மிருஷ்டான்னங்கொடுத்தால் தேவலோகத்தையும், அனேகர்க்கு அன்னதானஞ்செய்

தால் சத்தியலோகத்தையுமடைவான். எவன் பிதிர்களுக்குப் பிண்டக்கிரியையை மந்திரங்களோடு மகிழ்விக்கின்றானோ அவன் வசுதேவனாவான். நவக்கிரகதானஞ்செய்பவன் அக்கிரகலோகத்தையடைவான். பூமிதானஞ் செய்பவன் விஷ்ணுவுலகத்தையும், சொர்ணதானஞ்செய்பவன் அக்கினியுலகத்தையும், நவதானியதானம் பண்ணுபவன் விசுவதேவரூபத்தையும் அடைவான். அங்கே அதிதிக்குத்தானஞ்செய்பவன் பிரமலோகத்தையும், வஸ்திரதானங்கொடுப்பவன் சந்திரவுலகத்தையும், கம்பளதானங்கொடுப்பவன் சப்தரிஷிஸ்தானத்தையும், கோதானங் கொடுப்பவன் இந்திரவுலகத்தையும், அசுவதானங்கொடுப்பவன் வருணவுலகத்தையும், படுக்கைத்தானங்கொடுப்பவன் பானுலோகத்தையும், கன்னிகாதானஞ்செய்பவன் பிரமவுலகத்தையும், கனிகிழங்குமுதலியதானஞ் செய்பவன் தேவபோகத்தையும், மலர் மாலைசந்தனங்கொடுப்பவன் கந்தருவவடிவத்தையும், தாம்பூலங்கொடுப்பவன் எடுக்குஞ் சரீரந்தோறும் அஷ்டஐசுவரியத்தையும் அடைவான்.

இப்புவனாத்திரியில் அணுவளவு தானங்கொடுத்தாலும் எவ்வளவு செய்தாலும் கோடிமடங்கதி



கமாகும். பாவிகளாற் காணப்படாதது, இப்பதியைப்போல உலகத்திற்கிடையாது. கற்பகதருவைப்போல் யாவருக்கும் எல்லாவற்றையுங்கொடுப்பது. இன்னும் இதன்பெருமையைக் கூறவேண்டுமானால் அங்குவசிக்கும் விஷ்ணுவே சொல்லலாமன்றி நம்மால்முடியாது. முனிவர்களே அறியுங்கள் எனச் சூதமகாமுனிவர் அன்போடு சொல்லியவற்றைக்கேட்டு முனிவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள்.

## 9-வது அச்சுதசாமிச்சருக்கம்.

சூதபுராணிகரே! "இப்புவனாத்திரி தலவிசேடமெல்லாங்கேட்டு மிகக்களிப்புற்றோம். இன்னும் இத்தலத்தில் முத்திபெற்றோர் சரித்திரமுங்கேட்க அவாவுடையேம்" என்று முனிவர்கள் வேண்டுகோள்செய்தலும் அச்சூதமகாமுனிவர் கூறுவாராயினார்.

முற்காலத்திலே கிருதயுகத்தில் மணையம்பதியில் விஷ்ணுபக்தியுள்ளவனாய், சாஸ்திரமறிந்தவனாகிய நற்குணமுடைய அரிசாமி என்னும் ஒருபிராமணனுக்கு இரண்டுபிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுள்ளே அச்சுதசாமி என்பவன் அஷ்டபுத்தி

யும், யௌவனமும், அழகுமுள்ளவனாய்க், காமசாஸ்திரலோலனாய், சிற்றின்பசாரசங்கீதப் பாடலில் வல்லவனாய், காமுகர்களின் சிநேகிதனாய்த் தாசி வேசியர்களாற் புகழப்படுபவனாய், மன்மதபாணங்களைந்தாலும் பீடிக்கப்படுபவனாய்த், தாசிகளுண்டுகழித்தமது உணவுமுதலியவற்றைப் புசிப்பவனாய்ப், பெற்றோர்களாற் கைவிடப்பட்டவனாய் ஒவ்வொருநாளும் துஷ்டர்களோடுசேர்ந்து, வழியிற் செல்பவர்களை மறித்துத் தண்டித்து அவர்களிடத்துள்ள திரவியங்களைக்கவர்ந்து, அவர்களையுங்கொன்று மகிழ்ந்து தாசிகளோடுகூடிப் பொழுதுபோக்குவான். அன்றியும் செல்வர்கள் வீட்டிலுந் திருடிவந்து தாசிகட்குக்கொடுப்பான்.

ஒருநாட் பண ஆசையினால் வாளையுங்கைக்கொண்டு தன்னைப்பெற்றோர் வீட்டுவாயிலில் நின்றான். நீ யாரென்று வீட்டிலுள்ளவர் வினவ, உங்களுடைய குமாரன் யான் பசியால்வருந்துகிறேன் உணவுவேண்டும் என்றான். உடனே அவர்கள் இரங்கி அன்னமளித்தலும், உண்டு பசிநீங்கி அங்கேயே சயனிப்பவன்போலத் தங்கிப் பெற்றோர் கி தூங்னவுடன் வாளால் அவர்களையும் மற்றை



யோரையுங் கொன்று உள்ளிருந்த திரவியமெல்லாவற்றையும் கவர்ந்து, அந்த இராத்திரியிலேயே துஷ்டர்களோடும் தாசிகள் ஐவரையும் அழைத்துக்கொண்டு மதுரையை அகன்று வடதிசைநோக்கிச்சென்று எதிர் வருவோரை இம்சித்துப்பணங்கவர்ந்தும் கொன்றும் தன்னிஷ்டப்படிசெய்து தாசிகளோடு கூடிச்சுகித்துவந்தான். இவன் செய்கையைக் கண்டபலவானான செல்வன் தகுந்த வலிமையுடையவர்களால் அவனைப்பிடிப்பித்துக் கட்டிவைத்து அரசனிடம் ஒப்புவித்தான். அவ்வரசன் தண்டலாளர்களைக்கொண்டு சிறையில் இடுவித்தான். அப்படியே சிலநாட் சிறையிருந்து பின்னர்த் தந்திரத்தால் விலங்கையறுத்துத் தப்பிவெளிவந்து ஒரு மகமதிய தேசம்போய்ச் சேர்ந்தான். சேர்ந்ததும் அங்குள்ள மகமதியர்களோடுதானும் ஒருவனாகி மாமிசாதிபோசனமுண்டு, மதுபானஞ்செய்துவரும்போது ஒரு மகமதிய ஸ்திரீயைக் கைக்கொண்டு எவருமறியாமல் கிருஷ்ணாநதிதீரஞ்சென்று வசித்துவந்தான். பின் அம்மகமதியஸ்திரீ பெரியரோகத்தாற் பீடிக்கப்பட அவளை அங்கேயேவிட்டுத் தென்தேசம்வந்தான். வரும்போது சேது ஸ்நானத்துக்குச் செல்பவரில் யிருந்த அழ

குள்ள ஒரு பெண்ணை இச்சித்துக்கவர்ந்து அவ்ளோடு சந்தோஷமாகக் கிரீடைசெய்துகொண்டு பூர்வத்திற்செய்த அற்பபுண்ணிய விசேடத்தாலும் கிருஷ்ண நதிதீரத்தில் வசித்தபுண்ணியத்தாலும் இப்புவனாசலம்வந்து சேர்ந்தான்.

வந்தநாள் ஏகாதசியாதலால் அத்தலவாசிகள் அன்புடன் ஸ்நானஞ்செய்வதையும் விரதம் அநுட்டிப்பதையும் பார்த்து, அவனுடன்வந்த அந்தப் பெண்ணும் தானும் அந்தச்சுவேதநதியில் ஸ்நானஞ்செய்யச்செல்ல, அச்சுதசாமியுங் கூடப்போனான். இருவரும் ஸ்நானஞ்செய்து எல்லாருஞ் செய்வதுபோலத் தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை வாங்கிக்கொண்டு இலக்குமி வேங்கடேசப்பெருமாள் சந்நிதிசென்று, நாரததீர்த்தத்தைச் சிரசிற் புரோட்சித்து நமஸ்கரித்து எழுந்து அர்ச்சனை செய்வித்துத் துதித்துப் பிரதக்ஷிணம் வருங்கால் அரவுகடிக்க இறந்தான். உடனே அவனுயிரை இயமதூதர்கள் ஆயுதசமேதராய்க் கொண்டுபோகவந்தார்கள். அச்சமயத்தில் திடீரென்று ஆகாசத்திலிருந்து வாத்தியத்தொனிகளோடு சோதிமயமான நால்வர் பீதாம்பரதாரிகளாய்த் துளசி



மாலை அணிந்தவர்களாய் வந்து அச்சுதசாமிகிடக்குமிடம் அணுகி, அங்குவந்திருக்கும் காலதூதர்களே! நீங்கள் இங்குவருவதற்குக்காரணமென்னை? இனித்தாமதியாமல் வந்ததிசையைநோக்கி மரியாதையாகப் போகிறீர்களா இல்லையா? என்றார்கள். அதற்கு இயமதூதர்கள் பிறந்ததுமுதல் விரிக்கப்பட்டபாவங்களையே செய்து தூர்த்தனாய்ப் பெற்றோராலும் மற்றோராலுந் தள்ளப்பட்டுவந்து இறந்த இவனுயிரை யாங்கள் கொண்டுபோவதே முறைமை அன்றியும் எங்கள் அரசனுடைய ஆஞ்ஞையும் இதுவே, உங்களுடைய பிதற்றுவார்த்தை செல்லாதென்றார்கள். அதைக்கேட்ட விஷ்ணுகணங்கள் கோபங்கொண்டு புன்னகைபாளராய் அவன் எவ்வளவு பாவஞ்செய்தாலும் இறுதியிற் பெருமாளைச் சேவித்தவுடனே சுத்தனானான், ஆதலால் நீங்கள் சொல்வது அடாது என்னக் காலதூதர்கள் கேளாது அவனுயிரைக்கவர்ந்து செல்ல, அதைக்கண்ட விஷ்ணு தூதர்கள் சினந்து யமதூதர்களைப் புறங்கொடுத்தோடும்படி அடித்து வெருட்டி அச்சுறுத்தி அவனுயிரைமீட்டு வைகுண்டஞ்சென்று அவனை விட்டுணு சன்னிதியிற் சேர்த்தார்கள். பின்னர் வைகுண்டவாழ்விலே

கணங்களோடு மகிழ்ந்துவசித்துவந்தான். முனிவர்களே! பாருங்கள் எவ்வளவு பாவஞ்செய்யினும் இலேசிற் சுவேதநதி ஸ்நானமும் விஷ்ணுசேவையுஞ் சேர அவனடைந்தசுகம் இவ்வளவென்று யாராலுரைக்கமுடியும் என்று சூதமுனிவர் சொல்லுதலும், கேட்டமுனிவர்கள் சூதரைத் தோத்திரித்து ஆனந்த பரவசராய்க் கூத்தாடினார்கள்.

## 10-வது நாரததீர்த்தச்சருக்கம்.

முனிவர்பெருமானே! இப்புவனகிரிக்கண் எழுந்தருளியிருக்கின்ற விஷ்ணுவுக்கு வேங்கடேசப்பெருமான் என்னும் நாமம்வந்தவரலாற்றையும் அவர் ஆலயத்தமர்ந்த தீர்த்தத்துக்கு நாரததீர்த்தமெனவந்தவரலாற்றையும் விளக்கமுற எங்கட்கு உணர்த்தவேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமகாமுனிவர் கூறுவாராயினார்.

முதலில் நாரததீர்த்தத்தின் வரலாற்றைக் கூறுகின்றேன். முற்காலத்திலே பிரமதேவருடைய மடியில் உண்டானநாரதர், தாம் தேவரிஷித்தன்மையையும், சிவவிஷ்ணுபக்தர்களின் மேலாந்தன்மையையும் அடைவதற்காக எல்லாத்தேவராலும் புகழப்படுகின்ற திருப்பதிபருவதத்தையடைந்து



அங்குவாழும் வேங்கடாசலமூர்த்தியைத் தியானித்துக்கொண்டு அந்தக்கரணசுத்தியோடு ஐம்புலன்களையுமடக்கி நெடுநாள் அருந்தவம்புரிந்தார். இங்ஙனந்தவஞ்செய்யும் நாரதருக்கு முன்னே வேங்கடாசலமூர்த்தி எழுந்தருளிவந்து, நாரதனே! நீ இத்தலத்தில் இன்னும் எவ்வளவுகாலந் தவஞ்செய்தாலும் உனதிஷ்டம் நிறைவேறமாட்டாது. மிகவுங் கஷ்டமான கடுந்தவஞ்செய்தால் அப்பொழுது தான் சந்தோஷமாய் அருள்செய்வோம். ஆதலால் சிறிதுநாட் செய்யுந்தவத்தில் எனக்கு மகிழ்வுவரச்செய்வதும், எப்பொழுதும் சிவபெருமானுக்கும் எனக்கும் பிரியஸ்தானமாயிருப்பதும், எல்லாத்தலத்திலும் மேலானதுமாகிய புவனகிரியென்னும் ஒப்பற்றதலம் சுவேதநதிக்கரையிலிருக்கின்றது. ஆங்குச்சென்று தவஞ்செய்பவர்களுக்கும், நம்மைத்துதிப்பவர்களுக்கும் அவர்களுடைய வினைகளையோட்டி வேண்டியவரங்களையீவோம். ஆதலால் நீயும் ஆங்குச்சென்று சிலநாள் தவஞ்செய்தாற்போதும். வேண்டியவரமெல்லாம் அளிக்கின்றோம். என்று கூறிய வேங்கடாசலமூர்த்தியைப்பார்த்து வணங்கித்துதித்துத் தேவரே! இந்தத்திருப்பதிமலையிலே அம்மலைக்குத்

தலைவராகிய உம்மையே தியானித்துத் தவஞ்செய்து இஷ்டசித்திகளையடையவேண்டுமென்று முதலிற் சங்கற்பஞ்செய்து தவம்புரியத்தொடங்கினேன். ஆதலால் இனி வேறுதலஞ்சென்று வேறுமூர்த்தியை நினைத்துத் தவஞ்செய்து சித்திபெற எண்ணமில்லையென்று நாரதமுனிவர் சொன்னவார்த்தையைக்கேட்டவுடன் அன்போடு அந்நாரதரைப்பார்த்துச்சொல்லுவார். வேங்கடாத்திரிப்பெருமாளே புவனாத்திரிப்பெருமாள் புவனாத்திரிப்பெருமாளே வேங்கடாத்திரிப்பெருமாள் இரண்டுநாமமும் எங்களுக்குண்டு எவ்வகையாலும் நீ சந்தேகமுறவேண்டியதில்லை. இங்கே நெடுநாட்கழித்துப் பலனளிப்போம். அங்கே சீக்கிரம் பலனளிப்போம். இதுவேவித்தியாசம். ஆகவே நீ சீக்கிரத்தில் பந்தங்களை யகற்றக்கூடிய அப்புவனாத்திரிபோனால் உனதிஷ்டம்நிறைவேறுமென்று மறைந்தருளினார்.

அதுகேட்ட நாரதர்மகிழ்ந்து புவனாசலமடைந்து சுவேதநதியில் ஸ்நானஞ்செய்து அன்பரைக்காப்பவராய் சர்வலோகநாயகராகிய வேதபுரீசரரைக் கண்டவுடனே அன்போடு நமஸ்கரித்து விதிப்படி அபிஷேகித்துப் பூசித்துத் தூபதீபாரா



தனைசெய்து துதித்தபின்பு, மேற்றிசையிலே பஞ்சாயுதபாணியாய் வாழும் வேங்கடேசக்கடவுளை வழிபட்டுப் பூசித்துத், துதித்துத் தவஞ்செய்தற்குரிய இடம் எதுவென்று தேடித்தேடிக் குபேரனுக்குச் சித்தியளித்ததானங்கண்டு அடைந்து அங்கே தீவிரமான நற்றவஞ்செய்துவருங்கால், ஆலயத்திலுள்ளே தனித்தீர்த்த மொன்றில்லாததையெண்ணி, மணிமுத்தநதியுடன்கூடிய தீவாநதியைப் பத்தியோடு ஒரு முகூர்த்தநேரம் தியானிக்க உடனே சுவேதநதியாகிய பெண்ணரசி தீர்த்தவடிவாய் வேங்கடேசப்பெருமாள் சன்னிதிக்கு ஆக்கினேயத்தில் பூமியைக்கிழித்துக்கொண்டு வெளிவந்தாள்.

அங்ஙனம் வந்த சுவேதநதியைக்கண்டு மகிழ்ந்து, தாயே! அழகியமேனியாய்! உத்தமதீர்த்தரூபி! பாவநாசனீ! மாயாசொரூபி! இரத்தினாபரணதாரிணீ! மணிமுத்தசமூகசுவேதநதியாசி! அமிர்தப்பிரவாகதீர்த்தரூபி! சந்திரவதனீ! தேவர்களால் நமஸ்கரிக்கத்தகும் சிமாட்டீ! சுககாரிணீ! விஷ்ணுவுக்குப் பிரியமளிப்பதில் மேலான அன்னாய்! கங்கை, கயை, யமுனை, சரசுவதி, கோதா

வரி, கிருஷ்ணை, தாமிரபர்ணி, காவேரி, நர்மதை, துங்கபத்திரை முதலிய தீர்த்தவடிவமாய் விளங்கும் ஈஸ்வரி! உன்னைச் சரணாக அடைந்தேன். இரக்ஷிக்கவேண்டும் என்று துதித்தார்.

அவ்வாறு துதித்த நாரதருக்குமுன்னே சுவேதநதியானது சுயரூபத்துடன் வந்து நின்று, அன்போடு நாரதனே! சிவபக்தனே! உன்னுடைய துதியால் மகிழ்ந்தேன். சீக்கிரம் கடவுள் அருள் புரிவார். என்னைக்குறித்தும் அரனரிகளைக்குறித்தும் தவம்புரிபவர்கள் சித்திகளெல்லாவற்றையும் அடைவார்கள். என்னுடைய ரூபமாய்விளங்கும் இக்கிணற்றுநீரால் பெருமாளுக்கபிஷேகித்துத் தாமும் புரோக்ஷித்துக்கொள்ளுபவர் வைகுண்டத்தையடைவார்கள். எவர்கள் கார்த்திகைமாசத்தில் கார்த்திகைநட்சத்திரத்தில் ஆர்வத்தோடு இலக்குமியையும் பெருமாளையும் வழிபட்டுச் சன்னிதிகளில் நெய்விளக்கேற்றி மாவிளக்குமிட்டுத் துளசியாலருச்சித்து, கனி சித்திரான்னங்களை நிவேதிக்கின்றார்களோ அவர்கள் பிரமகத்திமுதலிய தோஷத்தினின்றும் விடுபட்டு இவ்வுலகவாழ்க்கையைச் சுகமாய்க்கழித்துப்பின் விட்டுணுபதவியையடை



வார்கள். எவர் கார்த்திகைமாதம் முழுவதும் இக்கிணற்றில் ஸ்நானஞ்செய்வரோ, அவர் தென்றிசைக்கோனை வேலையாளாகக்கொண்டு எப்போதும் வைகுண்டம் வாழ்வார். ஆதலால் தினந்தோறும் நீ இத்தீர்த்தத்தால் பெருமாளுக்கபிஷேகித்துப் பூசித்துத் தவஞ்செய்தால் விஷ்ணுமூர்த்தி உவந்துவந்தருள்புரிவார். நீ என்னைத்துதித்ததுபோல் யாரொருவர் துதித்தாலும் அவர் பலவகையின்பங்களையும் அநுபவிப்பார் என்று கூறிய சுவேதநதிதேவியைநோக்கி நாரதர்சொல்லுவார். பெண்மணீ! இக்கூபத்தில் எந்நாளும் வசிக்கவேண்டும் என்னுடைய தீர்த்தமென்று உலகமெல்லாஞ்சொல்லவும் வேண்டும் என்று கூறவே அங்ஙனமே ஆகுக என்றருளிமறைந்தாள். பின் அத்தீர்த்தத்துக்கு நாரததீர்த்தம் என நாமம் வழங்குகின்றது.

பின்னர் நாரதமுனிவர் தினந்தோறும் நாரததீர்த்தத்தில் மூழ்கி அத்தீர்த்தத்தால் பெருமாளுக்கபிஷேகித்துப் பூசித்துத்துதித்துத் தவஞ்செய்தார். அவ்வாறு தவஞ்செய்யும் நாரதருக்கு முன்னே வேங்கடேசப்பெருமாள் எழுந்தருளிச் சங்குசக்கரதாரியாய்க், கௌஸ்துபமணிமார்பின

ராய்க், காளமேகவர்ண மேனியராய்ப், பீதாம்பர தாரியாய்த், துளசிமாலையணிந்தவராய் விபூதிப்பிரகாசம்விளங்கும் நெற்றியையுடையவராய், உருத்திராக்கமிலங்குங் கண்டத்தையுடையவராய், இலக்குமிசமேதராய்ச், சிவபெருமானை உள்ளத்தே வைத்த உத்தமபத்தியையுடையவராய்க், கருடனின் பிடர்மேலிவர்ந்தருளிவந்தார், அங்ஙனம் வந்த வேங்கடேசப்பெருமானைக்கண்ட நாரதமகாமுனிவர் சிவசின்னஞ்சிறந்து விளங்குவதைப்பார்த்து மிகமகிழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அன்பர்களின் வினையகற்றியருளுஞ் சிவபெருமானைச் சிந்தையன்போடு சிவபூசைசெய்து, ஆயிரந் தாமரைமலரில் ஒன்று குறைதலாற் கண்ணிடந்தப்பிச் சக்கரம்பெற்றுச் சிவபக்தியை நிலைநிறுத்திய தொண்டர்பெருமானே! மற்சாவதாரமெடுத்து வேதங்களைக்கொண்டுவந்தவரே! கூர்மாவதாரமெடுத்து உலகத்தைத்தாங்குபவரே! இரணியாக்கனாற்கொள்ளப்பட்ட பூமியை வராகாவதாரத்தாற் கொண்டுவந்தவரே! சோமசூரியாக்கினிநேத்திரரான சிவனைப் பூசிப்பவரே! இந்தச்சுவேதநதியின்கண் மூழ்கி உபமன்னியுமகாமுனிவரிடத்துச் சிவாகமவிதிப்படி தீட்சைபெற்றதேவ



ரே! இரணியசங்கார நரசிங்கமூர்த்தீ! மாவலியைக் கொல்லவெடுத்த வாமனாவதாரப்பெருமானே! பரசுராமமூர்த்தீ! முன்னொருநாளன்று தேவரீர் "நானே பரப்பிரமம்" என்று செருவங்கொண்டவழி அகண்டாகார வியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமான் சோதிமயமாய்நிற்கக்கண்டு அவரது திருவடியை வராகரூபமாய்ப்பார்க்கப் பல்லூழிகாலம் பிரயாசப்பட்டும் இயலாது வருந்தி மேலெழவும் முடியாது சிவானுக்கிரகத்தால் துதிசெய்து செருவம் நீங்கி அச்சிவபெருமான்மாட்டு வேண்டும் வரங்களெல்லாம் பெற்ற செல்வத்தையுடையவரே! இராவணசங்கார ராமாவதாரா! பாரதயுத்தத்தைத் தொடக்கிய கிருஷ்ணாவதாரதந்திரரே! பின்னரும் கலியிலெடுக்கநேரும் பத்தாவதாகிய குதிரையவதாரக்கோலே. உமக்கு நமஸ்காரம் என்று துதித்தார்.

அவ்வாறு துதித்தநாரதரை விஷ்ணுதேவர் பார்த்துச் சிவபத்தனே! உன்னுடைய தோத்திரத்தால் பேரானந்தமுற்றேம். உனக்கு வேண்டியவரங்களைக் கேள்; சிவாஞ்ஞையினாற் றருவேம் என்றார். நாரதர் அவரைநோக்கி ஐயா? யாவ

ரும் என்னைத் தேவரீர் என்று கூறவும் சிவபக்தர்களுள் உத்தமனாகவும் தேவர்களாற் பூசிக்கத்தக்கவனாகவும்வேண்டும். இன்னும் நான் உம்மைப்பூசித்தலால் உமக்கு வேங்கடேசன் என்று பெயர்பெறவும் இப்பொழுதிருக்கும் வராகரூபம்மாறி வேங்கடேசவடிவமாய்வரவும் வேண்டும் என்றார். உடனே அவருக்கிரங்கிச் சிவானுக்கிரகத்தால் அப்படியேயாகுக என்றுசொல்லி மறைந்தருளினார். அங்ஙனமே நாரதர் வரங்களைப்பெற்று மேன்மையடைந்தார். இந்நாரதீர்த்தத்தின் மேலான தீர்த்தமும் இந்த வேங்கடேசப்பெருமாள்போல் சிவபெருமானிடத்துவேண்டும் வரங்களையெல்லாம் பெற்ற மூர்த்தியும் இச்சுவேதநதியையொத்தநதியும், இப்புவனாத்திரியையொத்ததலமும் எங்குங்கிடைப்பதரிது. வைகாசிமாதத்து விசாக நட்சத்திரத்திலும் கார்த்திகைமாசத்துக் கார்த்திகைநாளிலும் இந்நாரததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் சகல சித்தியும் பெறுவர். மாசிமாதத்து இரண்டு ஏகாதசியிலும் ஸ்நானஞ்செய்தால் விஷ்ணுபதவிகிடைக்கும். இங்ஙனம் குறித்தவாரம் திதி நட்சத்திரம் முதலியவற்றில் ஸ்நானஞ் செய்தாலும் பூசித்தாலும் வைகுண்டலோகத்தில் நெடுநாள் வாழ்வார்கள்.



65

## 11-வது புவனேசச்சருக்கம்.

இப்புவனாத்திரியில் எழுந்தருளியிருக்கும் கடவுளுக்குப்புவனேசுவரர் என்னும் பெயர்வந்த காரணத்தைச்சொல்லவேண்டுமென்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் சொல்லுகின்றார்.

முற்காலத்தில் மாடமாளிகை மதில் சிகரம் அகழ் இவைகளையுடைத்தாய் நான்கு வருணத்தாரும் நிறைவுடைத்தாய் விளங்கும் இப்புவனாசலத்தில் தர்ம நீதிகளையறிந்த புத்திமானும், கல்வியறிவுடையவனும் சிவபக்தனும் பகைவர்களை வெருட்டுபவனும் ஆன்மாக்களை ரக்ஷித்தலால் மகிழ்விக்குஞ் செங்கோலனும், நடுவுநிலைமையுடையோனும், பெரியோர்களால் புகழப்படுவோனும், இத்தலத்தின் சுவாமிபெயரையே தனக்கும் பெயராகக்கொண்டவனும் ஆகிய புவனேசுரன் என்னும் நாமம்பூண்ட அரசனொருவன், நாடோறும் நித்தியகருமம் முடித்துப் பூசைசெய்து புவனேசுவரனைச்சேவித்து அப்புவனேசுவரனுக்கு நிவேதித்த பிரசாதத்தை உண்டுவருவான். கிடைக்காதகாலத்தில் உபவ[illegible]ஞன். இருப்பான். இங்ஙனம் வெகுநாட் கழிந்துவருங்காலத்தில் மழையும் இடியும்

காற்றும் இருளும் கலந்துவர மழைவெள்ளம் பெருகி ஆற்றினிருகரையும் மூழ்கி ஓரே பெருக்காய்நிற்க, சனங்கள் இயக்கமற்றுப்போம்படி நேர, அரசனானவன் நியமமான சிவசேவையும், அவர்க்கு நிவேதித்த அன்னமுங் கிடைக்காமல் வருந்தி மூன்றுநாள் உபவாசமாகவேயிருந்து மனவலியுடன் சயனித்திருக்கும்போது அவ்வரசன் திடபக்தியும் நியமமும் ஒழுக்கமும் தவறாதிருத்தற்கு மகிழ்ந்து, அவனுக் கருள்புரிய வேண்டி அன்றிரவு அவன் சொப்பனத்தில் வயது முதிர்ந்த பிராமணரூபத்தோடு விபூதி ருத்திராக்ஷதாரணம்விளங்கும் மேனியராய், கோலூன்றிக் கொண்டு நேரில் தெரிய நின்றகடவுளை, அவன் கண்டு மகிழ்ந்து வணங்கிச் சுவாமீ! தேவரீர் எந்தவூர்? அடியேனிடத்தில் வந்தகாரியம் யாது? அடியேனாலாகவேண்டுவது என்னை என்றலும், அப்பிராமணர் அரசனே! "நான் புவனேச்சுவரத்தில் எப்பொழுதும் வசிப்பவன்; உன்னுடைய பத்திவிசேடத்தைக் கேள்விப்பட்டு உன்னைப் பார்க்கவந்தேன். பார்த்து மிகவுங்களிப்படைந்தேன். யாருக்குச் சிவபக்தி [illegible]முண்டோ அவர்கட்கு நான் மிகவும் அன்பன். அன்றியும்



அவர்மேற் சாதுக்களுக்கும் பிரியமுண்டாகும். ஆதலால் வருணாச்சிரமதருமப்படி பேரன்போடு புவனேசுவரனுடைய திருவருட் டெய்வமாட்சிமையை நினைத்துச் செய்யுஞ் சிவபத்திக்கு மேலானது உலகத்தில் ஒன்றுமில்லை என்று சுருதிகள் முழக்கமிடும். அங்ஙனமாகையால் சிவபத்தியிலே உன்னைச் சிறந்தவனென்று தெரிந்துவந்தேன். நானே புவனேசுவரன் என்று அறிந்துகொள். எனது சுயரூபத்தைக்காண்குதி. நானே உனக்கு என் சேவையையும் எனக்குநிவேதித்த அன்னத்தையுங் கிடைக்காமல் வெள்ளாறு பெருகும்படிசெய்தேன்" என்றுசொன்னார். உடனே அரசன் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்து எழுந்து துதிக்கும்போது சுவாமிபார்த்து, அரசனே! நான்தான் புவனேசுவரன்; எனக்கு நிவேதித்த அன்னத்தைப் புசித்துவா என்று தமது சொரூபத்தைக் காட்டிநின்றார்.

அங்ஙனமே உண்டுவருகிறேன் சுவாமீ! உம்முடைய திருவடிப்பேறு எனக்குக்கிடைக்கவேண்டும் என்றான். அப்படியே ஆகுக என்றுரைத்த சுவாமியைப்பார்த்து அரசன் திரும்பவும் சொல்

னுவான். "சுவாமீ! அடியேனுக்குக்காட்டிய திருவுருவத்தோடு இப்புவனுத்திரியில் எழுந்தருளிநின்று ஆன்மாக்களையெல்லாம் இரக்ஷித்தருளல்வேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனையாகும்" என்று கூறச், சிவபெருமான், தமது சுயவடிவத்தைக்காட்டி இப்படியே இப்புவனுத்திரியிலும் இருக்கின்றேன் என்று சொல்லி மறைந்தருளினார்.

உடனே விழித்தெழுந்த அரசன் ஆச்சரியங்கொண்டு மனைவிமக்களோடு அலங்கார ஆபரணாதி பூண்டு, மந்திரிமாரோடும் மற்றையாரோடும் நியமப்படி கர்மானுட்டானங்களை முடித்துத் தான் கண்ட சொப்பனத்தை யாவர்க்கும் விஸ்தாரமாகச்சொல்லி ஆலயதரிசனஞ்செய்ய எண்ணித், தேவபூசைக்கு வேண்டிய சாமான்களோடு கோயிலுக்குட் பிரவேசித்துச் சிவபெருமானைப்பார்த்து மகிழ்ந்து பிரதக்ஷிணஞ்செய்து விழுந்து நமஸ்கரித்து எழுந்து அந்தக்கரணசுத்தியோடு ஒரு முகூர்த்தநேரந் துதித்துப் பின் பால் தயிர் தேன் நெய் பழமுதலியவற்றாலபிடேகித்துச், சித்திரான்னங்களை நிவேதித்து, அநேக பிராமணர்களுக்கு



அன்னமளித்துத், தானும், மந்திரியும், தன்மனைவிமக்கள் முதலியவருமுண்டபின்னர்ப், பிராமணருக்குச் சொர்ணதானம், வஸ்திரதானம், பூதானம், கோதானமுதலியனசெய்து, அவர்களால் ஆசிபெற்றுச், சிவபெருமானிடம் உத்தரவுபெற்றுப், பெருமாள்கோயிலுக்குச்சென்று வணங்கி, அங்கேநாரதமகாமுனிவருடையவேண்டுகோளின்படி சிவபெருமானது திருவருளால் வராகரூபம் மாறி வேங்கடேசப்பெருமாளாயிருக்குந் திருக்கோலத்தையும் வியந்து தரிசித்து மற்றையரோடும் மாளிகைக்குவந்தான். அங்ஙனமே தினந்தினமும் வந்து தெரிசித்துச் சிவபெருமானது திருவருளால் அநேகவருஷம் அரசுபுரிந்து இருபத்தொருதலைமுறைவாழ்ந்து சிவபெருமானது திருவடி நீழலையடைந்தான். இந்த மிகவும் விசேஷமான புண்ணிய கதையைப்படிப்போருங் கேட்போரும் சிவபெருமானது திருவருளைச்சேர்வார்.

## 12-வது குபேரனருள்பெற்றசருக்கம்.

சூத புராணிகரே! குபேரன் சித்திபெற்ற இடத்தில் நாரதர் தவஞ்செய்தாரென்றீரே. குபேரன் இத்தலத்தில் எப்போது தவஞ்செய்து என்ன

விதமான சித்தியடைந்தான். விபரமாகச்சொல்ல வேண்டுமென்று முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

பிரமர்களுக்குள் ஒருவரான புலஸ்தியர் என்பவருக்கு விச்சிரவசு என்னும் ஒரு புத்திரரிருந்தார். அவருடையபிள்ளை வைச்சிரவணன் இலங்கையை அரசாண்டுகொண்டு வந்தகாலத்தில், விச்சிரவசுவுக்கு இராவணனென்னும் மற்றொரு பிள்ளை பிறந்து கடுந்தவஞ்செய்து பலவரங்களும் பெற்றுப் பெரிய வலிமையோடு தேவர்களைவருத்தி இலங்கையையடைந்து குபேரனை வெருட்டிவிட்டுத் தான் அரசாண்டுவர, உடனே குபேரன் வருந்தித் தன்தந்தையிடம் அறிவிக்க, அவர் இமயமலைச்சாரலையடைந்து சிவபெருமானை நோக்கிக் கடுந்தவஞ்செய் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அங்ஙனமே குபேரன்புறப்பட்டு இமயமலைச்சாரலில் நெடுநாள் தவஞ்செய்து வருங்காலத்தில் திருநந்திதேவர் அங்கே ஒருநாட் குபேரன் தவஞ்செய்வதறிந்து மகிழ்ந்து சமீபித்து நிற்றலும் குபேரன் நந்திதேவரைப்பார்த்துத் துதித்தவனாய் நிற்க, நந்திதேவர் வ குபேரனே! உன் தவக் குறை



யால் இவ்வளவு கஷ்டம் நேர்ந்தது. ஆயினும் இனி அஞ்சுவதைவிடுவாய்; தெற்கே வெள்ளாற்றுக்கு வடகரையில் உள்ள புவனகிரியையடைந்து அங்கே எழுந்தருளியிருக்கும் வேதபுரீசுரர் சன்னிதியில் மீனாக்ஷிகூபத்தைக்கண்டு, அத்தீர்த்தத்தாலும், சுவேதநதிதீர்த்தத்தாலும் வேதபுரீசுரருக்கு அபிஷேகஞ்செய்து பூசித்துத் துதித்து, வெள்ளாற்றுக்கு வடபாலுள்ள செல்வவிநாயகரையும் வழிபட்டுத் தவஞ்செய்து வந்தால், எளிதில் எண்ணியவெல்லாம் பெறுவாய்! என்று அருள்புரிந்துபோனார். உடனே குபேரன் அங்ஙனமே பேராவாவோடுபுவனாசலமடைந்து, சுவேதநதியிலும், மீனாக்ஷிகூபத்திலும் மூழ்கி, அத்தீர்த்தங்களால் வேதபுரீசுரரை அபிஷேகத்தாலும், வில்வதளங்கொண்டு அருச்சித்தலாலும் மகிழ்வித்துச், செல்வவிநாயகரை வழிபட்டுத் தவஞ்செய்தான்,

அவ்வாறு தவஞ் செய்யுங் குபேரனுக்கு முன்னர், வேதபுரீசுரர் இடபவாகனத்தில் மீனாட்சியம்மையோடுமெழுந்தருளிவந்தார். கண்டவுடன் உரோமஞ்சிலிர்ப்பப் பரவசனாய்ப் பேரானந்தமுற்றுக் கூத்தாடிப் பிரதக்ஷிண நமஸ்கார

வழிபாடுகள் செய்துநிற்கச், சுவாமி அன்போடு குபேரனைப்பார்த்து "வேண்டியவரங்களைக்கொடுக்கின்றோம் கேட்குதி" என்றார். என்றதும் "சுவாமீ! அகிலாண்டநாயகரே! சர்வவியாபகரே! பஞ்சகிருத்திய பரமகாரணரே! விஷ்ணுவின் நேத்திர கமலமலரைத் திருவடியிற்றரித்தவரே! ஆதியந்தமற்றவரே! அநாதிமலமுத்தரே! அடியேன் செய்தகுற்றங்களை நீக்கி ஆட்கொண்டு, உம்முடைய திருவடிக்கன்பனாக்கவும், என்னுரிமை நண்பனாய்த் தேவரீர் எப்பொழுதும் இருக்கவும் வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்குச்சுவாமி, "அன்பனே உன்னிஷ்டப்படி கொடுத்தோம்; இன்னும் வடதிசைக்கும் அளகைக்கும் அதிபதியாம் அரசுரிமையுமளித்தோம்" என்று பிரமாவை நினைக்க அவர்வந்தவுடன் ஏ பிரமனே! நீ இக்குபேரனை வடதிசைக்குக்கொண்டுபோய் அத்திசைக்கதிபனாக முடிசூட்டி, அளகாபுரியுமாளக்கொடுத்துப் பின்னர் வருதியென்றுஞ் ஞாபித்து மறைய, அக்கணமே பிரமதேவர் குபேரனைக்கொண்டு வடதிசையிற்சென்று திசைவேந்தனாக்கி மகுடஞ்சூட்டி, அளகையையாளுமரசுங் கொடுத்துச்சென்றார். அதுமுதற் குபேரன் பரமசி



வன்றோழனாகவும், அளகைவேந்தனாகவும், வடதிசைக்கதிபனாகவுமிருந்துவந்தான். கேட்டீர்களா முனிவர்களே! சுவேதநதியின் மாட்சியும், புவனாத்திரியின் வைபவமும், மீனாட்சிகூபத்தின் பெருமையும், விநாயகரருளுங்கிடைத்தவர் ஒருவராலுமடையமுடியாத பெருவாழ்வை எப்பொழுதும் அடைவார் என்பதற்கு இச்சரிதமே சாக்ஷியாகும். இக்கதையைப் படித்தோர் கேட்போர்யாவரும் வேதபுரீசுரர் திருவருளைப் பெறுவார்.

## 13-வது மீனாட்சிகூபச்சருக்கம்.

முனிவர் பெருமானே! குபேரன் மீனாட்சிகூபத்தில் ஸ்நானஞ்செய்து அத்தீர்த்தத்தால் வேதபுரீசுரரை அபிஷேகித்துவந்தான் என்றீரே. மதுரையின்கணுள்ள மீனாட்சியம்மை இவ்விடம்வந்ததும், தன்பேரால் கூபமேற்படுத்தியதும் எதற்காக? அத்தீர்த்தமகிமையையும் மீனாட்சி இங்குவந்த வரலாற்றையும் விளங்கச் சொல்லியருளல் வேண்டும் என்று முனிவர்கள் கேட்கச் சூதபுராணிகர் சொல்லுவார்.

முனிவர்களே! இக்கதையைக் கேட்டவுடனே பேரானந்த முண்டாகும். பாண்டிமாநகரத்தின்

திலகம்போல் விளங்கும் மதுரையம்பதியில் தேவேந்திரனாலமைக்கப்பட்ட இரத்தின சிம்மாசனத்தின்கண் சொக்கலிங்கமூர்த்தி பிரமாதிதேவர்கள் போற்ற எழுந்தருளியிருக்கும் வைபவம் இவ்வளவென்று எடுத்துரைப்பாரெவர்? ஒருநாள் மீனாட்சியம்மையார் விளையாட்டாக வெளியிலெழுந்தருளிவந்து தம் நாயகராகிய சொக்கலிங்கமூர்த்தியின் பிற்பாகம்நின்று அவருடைய திரிநேத்திரங்களையும் தமது திருக்கரங்களால் ஒரு கணப்பொழுதுமூடிக் கையையெடுக்க, அக்கணநேரம் தேவர்களுக்கும் மற்றைமுனிவர் மனிதர் முதலியவர்க்கும் அனேக யுகங்களாய்க் காலக்கடவுளர்களாகிய சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடர்களும் இல்லாமல் இருள்மயமாக, நித்தியகர்மானுட்டானங்களும், அக்கினி காரியங்களும், யாகாதி கிரியைகளும் இழக்கப்பெற்று வருந்துவோராய், யாவரும் சொக்கலிங்கமூர்த்தியையடைந்து குறைகளைக்கூறிப் பிரார்த்திக்க, ஆலவாயண்ணல் தேவர் முதலியவர்களைப் பார்த்துச் சொல்வார்.

நித்தியகர்மானுட்டானங்கள் முதலியன விடுத்ததனால் நேர்ந்த குற்றத்துக்குக் காரணம் நீங்களுமல்ல; முச்சுடர்களுமல்ல, எல்லாக்குற்றங்களும்



மீனாட்சிவசமாய்க்கிடக்கின்றன என்றார். உடனே அம்மை திடீரென்றெழுந்து சுவாமியைத் துதித்து அடியேன்மேற் குற்றம் எவ்வாறு வந்தது என்ன, நீ என் நேத்திரங்களை மூடியவகையால் உலகமெங்கும் அநேக தேவவருஷம் இருள்மயமாய்க் கிடந்தது. அதனால் யாவரும் தங்கள் தங்கள் வருணாச்சிரம ஒழுக்கங்களினின்றுந் தவறினார்கள். ஆகையால் உன்மேற்கிடக்குங் குற்றங்களளவில்லை என்றார்.

அதுகேட்ட உலகமாதா அச்சமுற்று மனம் வருந்தித் தமியேன் அறியாமையாற் செய்த குற்றம் நீங்குவதற்குத் தக்க உபாயத்தைக்கூறி அனுக்கிரகிக்கவேண்டுமென்று திருவடியில் வீழ்ந்து வணங்கி எழுந்து துதித்துப் பிரார்த்தித்தார். உடனே சுவாமி இரங்கி நாமிருக்கும் இந்த இடத்திற்கு நெடுந்தூரம் ஈசானியதிக்கில் வெள்ளாறு என்னுந் திவ்விய நதி ஓடுகின்றது. அதன் வடகரையில் புவனாசலமெனப் பெயர்கொண்ட திவ்வியதலமொன்று எனக்கு வாசஸ்தானமாக விளங்கியிருக்கின்றது. அங்குள்ள மூர்த்தியின் நாமம் வேதபுரீசுரர்; ஆதலால், ஆண்டுநீ சென்று, சுவேதநதியில் மூழ்கி, அங்குள்ள வில்வதளங்களால் அவ்வேதபுரீசுரரை அருச்சித்துத் தவஞ்செய் என்றார்.

உடனே மீனாட்சியம்மை குறித்த வெள்ளாற்றையடைந்து, ஸ்நானஞ்செய்து, வடபாற்சென்று வில்வதளங்களால் வேதபுரீசுரரை அருச்சித்துத் துதித்துக்கொண்டுவருங்கால், தன்பேரால் அவ்வாலயத்தின் ஆக்கினேயத்தில் கூபமொன்றுண்டாக்கி, அத்தீர்த்தத்தால் அபிஷேகித்துப், பிரதக்ஷிண நமஸ்கார வந்தனைங்கள் ஒழுங்கிற்செய்து, மூன்று வருஷந் தவஞ்செய்து வருவாராயினார். அங்ஙனந் தவஞ்செய்யும் மீனாட்சியம்மைக்கு நேரே வேதபுரீசுரர் எழுந்தருளிவர, அம்மையார் கண்டு பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, உலகங்களெல்லாவற்றுக்குந் தலைவரே! பிரமன்முதற் புழு ஈறாகிய உயிர்களுக்குயிராய் விளங்குபவரே! முனிவர்களின் இருதயகமலத்தில் வசிப்பவரே! சகலலோக சங்காரமூர்த்தி! பஞ்சகிருத்தியபரமானந்த தாண்டவமூர்த்தி! வேதவேதியரே! முக்குணாதீதரே! தேவதேவரே! ஏகநாயகரே! யாகாதி அக்கினி காரியத்தின் காரணரே! அஷ்டசித்திகளையும் அன்பர்க்களிக்கும் வள்ளலே! கங்காதரரே! உலகங்களை அழிக்குங் காளகூடவிஷத்தையுண்டு இரட்சித்தருளும் பெருமானே! பிரமவிஷ்ணுக்களால் அறியமுடியாத முடியையும் அடியையுமுடையவரே! கா



மதகனரே! சகலவேதகர்த்தரே! நரசிங்கத்தையழித்த சரபமூர்த்தியே! விநாயகர் சுப்பிரமணியர் என்னும் இருகண்மணிப் புதல்வரைப்பெற்று விளங்கும்நாதரே! சர்ப்பாபரணரே! தக்கன்யாகஞ் சீர்கெடச்செய்த சங்காரகர்த்தாவே! வேதபுரீசுரரே! சுந்தரேசுரரே! திருநுதலிற் றீக்கண்ணுடையவரே! மகாமேருவை வில்லாகக்கொண்டவரே! மார்க்கண்டமுனிக்காகக் காலனையுதைத்தவரே! பிரமகபாலத்தைத் திருக்கரத்திலேந்தின மூத்தரே! இப்புவனாசலத்தில் என்றும் எழுந்தருளியிருக்கும் நாயகரே! உமக்கு நமஸ்காரம்; அடியேன்செய்த குற்றம் விலக அருள்புரியவேண்டும். இத்தலத்திலும் யான் உம்மோடு எக்காலமும் இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்

• அதுகேட்ட வேதபுரீசுரர் பெண்ணே! உன்னுடைய குற்றம் முற்றும் நீங்கினது. இனிச் சுத்தமுடையவளானாய். இங்குவசிக்க விரும்பியது எதற்காக என்றாலும், அம்மை ஆலவாயும் இதுவும் சரியாக அங்கும் இங்கும் வேரீர் சுந்தரேசுவரர் என்னும் பேரோடும்யான் மீனாட்சிஎன்னும் பேரோடும், கூடி விளங்க அருளல்வேண்டும். அன்றியும் •

என்போல் இக்கூபம் விளங்கவேண்டும் என்றார். உடனே வேதபுரீசுரர் மகிழ்ந்து "உன்சத்திகளுடன் இவ்விடத்தில் உன்னிஷ்டம்போல இருத்தி. நம்மிருவரையும் இவ்விடத்தில் அபிடேகித்துத் துதித்திடுவோர் ஜனனவேரறுத்துச் சுத்தராய் நம்மிடம் வருவார். நீ தைமாசம் பூசத்தில் என்னை வந்தடைந்தபடியால் அன்றையதினம் இக்கூபத்தில் மூழ்கி அத்தீர்த்தத்தால் நம்மை அபிடேகித்துத் துதிப்போர் நமது சாயுச்சியம் பெறுவார். தைமாசமுற்றும் மூழ்கித் துதித்தால் அநேகசனனம் அரசாண்டிறுதியில் நமது திருவடிசேர்வார். தை, மாசி, பங்குனிமாதத்தில் முறையாய் வரும் பூசம், மகம், உத்திரநட்சத்திரங்களில் மூழ்கி வணங்குவோரும் நவராத்திரி யுற்சவத்தில் இக்கூபத்திலும் சுவேத நதியிலு மூழ்குவோரும், பிராமணன், தந்தை, தாய், சிசு, ஸ்திரி இவர்களைக் கொன்றபாவத்தினின்றும் விடுபடுவார். இன்னும் களவு, கொலை, மதுபானமுதலிய கடும்பாதகம் புரிவோரும் இதின் மூழ்கினால் பாவநாசராய்ச் சூரியமண்டலமார்க்கமாகப் பிரமலோகமுதலிய மேலுலக முறுவார். சித்திரை, கார்த்திகை, வைகாசி, மாசிமாதப் பூரணைகளில் மூழ்கில் நமது உலகத்தையடைவார். கார்



திகை தைமாதச் செவ்வாயில் ஸ்திரீகள் இதில் மூழ்கிப் பிரதக்ஷிணஞ்செய்து சன்னிதியில் மாவிளக்கேற்றுவாராயின் எழுபிறவியிற் சுமங்கலிகளாய் வாழ்ந்து உன்னுடைய சாரூபம் பெறுவார்கள். நீ துதித்த துதிகளால் யார்துதித்தாலும் சிவபதமுறுவார்" என்று திருவாய் மலர்ந்தருளி அம்மையோடு மறைந்தருளினார். அது முதல் மீனாட்சிகூபமென்னும் பெயர் வழங்குவதாயிற்று.

## 14-வது இரகசியக்கேள்விச்சருக்கம்.

எல்லாப்புராண சரித்திரங்களையுமுணர்ந்த முனிவர்பெருமானே! இதுவரையும் புவனாசலமகிமையைப் பலவகையாலும் விளக்கிக்கூறினீர். ஆதலால் எத்தனையோ விசேடமுடைய காசி, சேது, மதுரை, காஞ்சி, சிதம்பரமுதலிய திவ்விய தலங்களைவிட மேன்மையுள்ளது இப்புவனாத்திரியென்று அறியக்கிடக்கவும், யாதுகாரணத்தால் உலகப்பிரசித்திபெறாமல் சாதாரணதலம்போல் விளங்கக்கடவதாயிருக்கின்றது என்பதை விரிவாயெடுத்துச்சொல்லவேண்டுமென்று முனிவர்கள் கேட்கச் சூதமகாமுனிவர் சிவபெருமானது திருவருளாற் கூறுவார்.

இப்பொழுது நீங்கள் கேட்டவிஷயம் மிகவும் மேலானது. இதற்குப் பதில் சாதாரணமானதன்று. எவருக்குங் கூறத்தகுந்ததுமல்ல. ஆயினும் உமக்குச் சொல்கின்றேன். முற்காலத்தில் நான்குவருணத்தாரும் அதிலுங் கீழ்த்தரமான உயிர்களும் இப்புவனத்திரியின் வைபவமுற்றும் நன்குணர்ந்து ஆயுளின்கடைசியில் ஆண்டுக்சென்று நாம் வேண்டிய வாழ்வுகளைப் பெற்றுக் கடவுளருள் பெறலாமென்றெண்ணித், தங்கள் தங்கள் வருணாச்சிரம ஒழுக்கமுறைகளை அடியோடுகைவிட்டுப், புண்ணியத்தொகுதியைமறந்து, பாவமே இஷ்டப்படி புரிந்து, தேவர்கடன், முனிவர்கடன், பிதிர்கடன் முதலியவற்றைச் செய்தலையொழிந்து, யாகாதி அக்கினிகாரியங்களைவிட்டு, வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்டவற்றை யகற்றி விலக்கப்பட்டவற்றைக் கைக்கொண்டு, வருணம் ஆசாரம் முதலிய வித்தியாசமில்லாமல் சாதுக்களை நிந்தித்து இறுதியிற் புவனசலஞ்சேர்ந்து ஒருவருஷம், ஒருமண்டலம், ஒருமாசம், மூன்றுநாள், ஒருநாள் தங்கிச் சுவேதநதி மூழ்கி வேதபுரீசுரரை வணங்கித் துதித்து யாவரும் முத்தியின்பம் பெற்றார்கள்.

81

அவ்வனம் உலகத்தார் முற்றும் முத்திசேர, வைவஸ்வத பட்டணமாகிய யமபுரியை யடைவா ரில்லாமல் அவ்வூர் பாழாக, அதுகண்ட தரும ராஜன் தன் சித்திரகுப்தர் காலன்முதலியவர்க ளுடன் இந்திரனிடஞ் சென்று முறையிட, இந்தி ரன் யமனோடு பிரமாவினிடம்போய் விண்ணப் பிக்க, அவர் ஒரு முகூர்த்தநேரம் நிஷ்டையிலி ருந்து "புவனாத்திரி க்ஷேத்திர மகிமையாலல் லவோ யமபுரி பாழாயிற்று" என்றறிந்து எல் லாருடனும் புவனாத்திரியையடைந்து, ஆங்கு எழுந்தருளியிருக்கும் வேதபுரீசுரரையும் மகா விஷ்ணுவையுங்கண்டு ஆனந்தக்கூத்தாடி வணங்கி கிருபாநிதிகளே! பார்வதியையும் இலக்குமியை யும் இடப்பாகத்திலும் மார்பிலுங் கொண்டவர் களே! சர்ப்பங்களை ஆபரணமாகவும் சயனமாக வும் வைத்திருப்பவர்களே! இடபம் கருடன் இவ ற்றை வாகனங்களாகவும் கொடிகளாகவுங் கொண் டவர்களே! உலகத்தைச் சங்கரித்தும் காத்தும் வருபவர்களே! என்று துதித்து நின்றார்.

அவ்வாறு துதித்து நிற்கும் பிரமன், இந்திரன், யமன் முதலிய தேவர்களை மகாவிஷ்ணு பார்த்துப் புன்னகைகொண்டு, தேவர்களே! உங்களுடைய துதியால் சிவபெருமானும் யாமும் மகிழ்ந்தோம். நீங்கள் நினைத்துவந்த விஷயம் புவனகிரி தலவிசேடத்தால் யாவரும் முத்திபெற, யமபுரி சூனியமாய்ப் போனதைக்குறித்து அல்லவா என்று கூறியருளிப் பின்னுங் கூறுவார்.

இனி சிவாஞ்ஞைப்படி யான்செய்யும் மாயா வலியால் யாவரும் இப்புவனகிரியை மேலானதென் றெண்ணாமலிருப்பார்கள். யாராவது இத்தலமகிமையை எடுத்துச் சொன்னாலும் மற்றவர் செவிகொடாமல் அலட்சியம் செய்வர்கள். இப்பதி மேலானதல்லவென்று யாவரும் பரிகசிப்பார்கள். புண்ணிய க்ஷேத்திரமென்று வெளிப்படையாக விளங்காதிருக்கும். தெரிந்துவந்து அன்போடு சுவேதநதியில் மூழ்கித்தெரிசிப்போர்க்கு மாத்திரம் முத்தியளிப்போம். தெய்வபக்தி, குருபக்தி, புராணபக்தியில் மேம்பட்டு இத்தல விசேடத்தையறிந்து வந்தவருக்கே முத்திசித்திக்கும் என்றும், எவன் வேதசாஸ்திரங்களையுணர்ந்து,





கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி வந்து, சாதுவாசனாய், பிராதக்கால ஸ்நானஞ் செய்து நித்திய கருமானுட்டானங்களால் கோபம் முதலிய குற்றங்களை யகற்றிப் பேரன்போடு எம்முடைய பதியாகிய சிவபெருமானையும் எம்மையும் திரிகாலமுந் தெரிசித்து வருவானோ, அவன் நல்ல பெருவாழ்வடைவானென்றும், வினையோர் அறியாது குற்றமேபுரிந்து இறந்து நரகத்துன்பத்தை யனுபவிப்பாரென்றும், இனி வைவஸ்வதப்பட்டணம் வெறுமையாகாதென்றும் சொல்லிப் பிரமன், இந்திரன், யமன் முதலியவர்களை அவரவரிடத்துக்குப் போய்ச் சேரும்படி அனுப்பினார்.

அதுமுதல் அப்புவனகிரி பெரியக்ஷேத்திரமாயிருந்தும் எல்லாமறிந்த சாதுக்களுக்குமட்டுமே அடையக் கூடியதாகவும் ஏனையவர்க்கு எளிதிற் போகமுடியாதவாறு புத்திவிளங்காமல் மகிமைகுன்றிப் போவதாகவும் ஆய்விட்டது. ஆனாலும் உண்மைவகையில் அத்தலத்துக்கொப்பான தலமும் அம்மூர்த்திக்கொப்பான மூர்த்தியும் அச்சுவேத நதிக்கொப்பான நதியும் இல்லையென்று அறிந்து கொள்ளுங்களென்று சவுனகாதி முனிவர்க்குச் சூதமுனிவர் சொல்லியருளினார்.

## 15-வது சுவேதநதிச்சருக்கம்.

புவனுத்திரி மகிமைமுற்றும் எங்கட்கு நன்கறிவுறுத்திய முனிவர் பெருமானே! இனிச் சுவேத நதியின் உற்பத்தி ஸ்தானமும், அந்நதியின் வைபவமும், மற்றும் அதன் சம்பந்த சரித்திரமுங் கூறியருளல்வேண்டுமென்று சவுனகாதி முனிவர்கள் பிரார்த்திக்க, அவர்களை நோக்கிச் சூதபுராணிகர் சொல்லுகின்றார்.

ஜில்லிகை என்னும் பேர்கொண்ட ஓரிராக்கதப் பெண்ணுக்குச் சுவேதா, கிருஷ்ணை என்கிற இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்து, தாயார் உத்தரவுப்படி ரிஷிமுகம் என்னும் மலைச்சாரலையடைந்து, பிரமதேவரைக்குறித்து நெடுநாள் தவஞ்செய்து வருங்காலத்தில் மதங்கரிஷியின் புத்திரரிருவர் வனசஞ்சாரர்களாய்ச் சுற்றிவரும்போது, தவஞ்செய்யும் இரண்டு கன்னிகைகளையுங்கண்டு மோகங்கொண்டவர்களாய் விவாகஞ்செய்து கொள்ளுதற்கு இச்சையுடையவர்களாய்ச் சமீபித்து நீங்கள் யார்? எதற்காகத் தவஞ்செய்கிறீர்கள்? எங்களை நீங்கள் மணம்புரிந்துகொள்ளவேண்டும். உங்கள்மேல் மிகுந்த மோகங்கொண்டோம் என்று வினயத்துடன் தெரிவிக்க, அப்பெண்கள் "நாங்கள் ஜில்லிகை என்னும் இராக்கதப்பெண்ணின் புத்திரிகள், தாயினது அருளால் இவ்விடம் தவஞ்செய்ய வந்தோம், நதிரூபமாகவந்து ஜனங்கட்கு உபகாரவிஷயமாய்ச் செல்லவேண்டுமென்னும் அபிப்பிராயத்தோடு பிரமதேவனைக்குறித்துக் கடுந்தவஞ்செய்கின்றோம், ஆதலால் தவம் முற்றிய பின்னர் எங்கள் தாயாரிடமறிவித்து உங்கள் கருத்தின்படி உங்களையே மணந்து கொள்ளுகின்றோம், அதுவரை தாமதித்திருங்கள் என்று கூற, சரியென்று இருஷிபுத்திரர்கள் சென்றார்கள்.



பின்னர்த் தங்களெண்ணம் நிறைவேறும்பொருட்டுப் பிரமதேவரைத் தியானித்துக்கொண்டு பெருந்தவஞ்செய்து வருங்காலத்தில் பிரமா அவர்களுக்கு முற்பட்டுவந்து, ஜில்லிகை குமாரிகளே! உங்கள் தவத்தால் பெருமகிழ்ச்சி எனக்குண்டாயிற்று. தவநிலைபோதும், இன்னுஞ் சில நாட் சென்றபின்னர் நீங்கள் என்கட்டளைப்படி நதிரூபமாகப் பிரவாகித்து வருவீர்கள். வரும்

போது உங்களிருகரையிலும் சிவபெருமானது விட்டுணுவினதும் ஆலயங்கள் சிறந்துவிளங்கும். அந்தணர்கிருகங்கள் அழகுறவிளங்கும். பூஞ்சோலைகள் பொலிவடையும். இப்படியாக நீங்களிருவரும் வர உங்கள் தீர்த்தத்தில் எவர் ஒருகாம் ஸ்நானம் செய்யினும் அவர் சகல பாவவிமோசனராய், சகலசித்தியும் இஷ்டப்படி பெற்று இறுதியில் பேரின்பசாகரத்தழுந்திச் சிவபெருமானது திருவருளைப்பெறுவார் என்று கூறியருளி மறைந்தார்.

இங்ஙனம் பிரமதேவரிடம், நதிகளுள் உத்தமமாந் தன்மையையும், சிவானுக்கிரக விசேடவரத்தையும் பெற்ற சுவேதா கிருஷ்ணை என்னும் இருவரும் தங்கள் தாயாகிய ஜில்லிகையிடஞ் சென்று தெரிவித்து, அத்தாயின் சொற்பிரகாரம் முன்னர்க்கூறியவாறு மதங்கரிஷி புத்திரர்களிருவரையும் விவாகஞ்செய்துகொண்டு, பாதியம்சம் பெண்கள் ரூபமாகவும் பாதியம்சம் நதிகள் ரூபமாகவும் வாழ்ந்துகொண்டு, தாங்கள் நதிரூபங்களாகப் புறப்படுதற்கு மதங்கரிஷியின் ஆச்சிரம



வனத்தானத்தையே உற்பத்தியிடமாகக்கொண்டு சுவேதா, கிருஷ்ணை என்னும் நாமங்களையே உலகத்தார் சொல்லச் சமுத்திரசங்கமமானார்கள். கிருஷ்ணாநதியின் பிரபாவத்தை அப்புராணத்தால் தெரிந்துகொள்க.

அவ்வாறு சுவேதா என்னும் பெண் நதிவடிவாய் மதங்கரிஷி ஆச்சிரமந்தொடங்கிச் சமுத்திரராஜனை நோக்கிவரும்போது, தன் அலைகளாகிய கரங்களாலே சமுத்திரத்தைப்பார்த்து, ஏ நதிபதீ! சகரர்களால் தோண்டப்பட்டமையாற் சாகரமெனும் பேருடையோய்! என்று விளித்துப் பலவாறு புகழ்ந்துரைத்து, என்னை விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்த சுவேதநதியைச் சமுத்திரநாயகன்கண்டு, ஏ நதியரசீ! சுவேதையே! உன்னுடைய தோத்திரத்தாலும், என்மேல்வைத்த அன்பாலும், நான் சந்தோஷங்கொண்டேன், நீ என்னைத் துதித்தபடியால் உன்னதியில் ஸ்நானஞ்செய்யும்போது யாரொருவர் புகழ்வார்களோ அவர்களுக்கு எல்லாத்தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்தபலன் முழுவதையும்

கொடுக்கின்றேன். அன்றி உனது விருப்பப்படி
பின்னர் உன்னை மணஞ்செய்து கொள்கின்றேன்
என்று கூறிப் பிரமதேவனை நினைத்தான்.

நியானித்தவுடனே பிரமதேவர் சகலதேவர்
களுடனும் வந்து, சுவேதையையும், அவள் தாயார்
லில்லிகையையும், சமுத்திரபதியையும் உடன்
கொண்டு, பிராமணர்கள் முனிவர்கள் பலர்சூழப்
புவனசலமடைந்து, வேதபுரீசுரர் சன்னிதியில்
சுபலக்கினத்தில் சுபயோகத்தில் அக்கினிசாட்சி
யாகச் சுவேதையைச் சமுத்திரராசனுக்கு விவா
கஞ்செய்துகொடுத்து, ஆசீர்வாதஞ்செய்து எல்லா
ரும் மங்களவாழ்த்துக்கள் சொல்லத் தாமும் சரஸ்
வதியும், பிருகஸ்பதியும், இந்திரன்முதலிய தேவர்
களும் முனிவர்களும் பிராமணர்களும் மற்றையோ
ரும் சுவேதைக்கும் சமுத்திரபதிக்கும் வேண்டிய
வரங்களைக் கொடுத்தபின்னர்ச் சுவேதநதியைப்
பார்த்துச் சுவேதையே! உலகத்துள்ளோர் உன்
னைக் கண்டமாத்திரத்தே அவர்கள்செய்த பாவத்
தொகுதியில் ஒருநாட் பாவந்தொலையும், உன் தீர்த்
தத்தைத் தொட்டால், ஒரு மாசபாவமும், ஆசம



னஞ்செய்தால் ஒருவருஷப்பாவமும் சிரசிற் புரோ
க்ஷித்தால் மூன்றாண்டுபாவமும், ஒருதரம் ஸ்நானஞ்
செய்தால் பத்தாண்டுபாவமும், மூன்றுதரம் ஸ்நா
னஞ்செய்தால் நூறுவருஷப்பாவமும், மூன்று
தினம்ஸ்நானஞ்செய்தால் மூன்றுஜனன பாவமும்,
ஏழுநாள் ஸ்நானஞ்செய்தால் ஏழுஜனனபாவமும்
நீங்கும். ஒருமாதம் ஸ்நானஞ்செய்ய ஆத்மஞானத்
தையும், ஒருமண்டலஸ்நானஞ்செய்யப் பிரமலோ
கத்தையும், ஓராண்டு ஸ்நானஞ்செய்ய உருத்திர
ருலகத்தையும் அடையலாம்.

உன்னுடைய உற்பத்திஸ்தானமுதல் சமுத்
திர சங்கமம்வரையில் எவ்விடத்து மூழ்கினும்,
இஷ்ட சகல சித்தியும் பெறுவார். உன் தீர்த்தக்
கரையிலுள்ள சகல ஜந்துக்களும் முத்தியடையக்
கடவனவென்றும், உன்னிடத்திலுள்ள மணலும்,
கல்லும், நுரையும், அலையும், ஆகிய எல்லாம்
தெய்வரூபமாக விளங்குக என்றும், உன் தீர்த்தக்
கரையில் யார் உன் தீர்த்தத்தால் தர்ப்பணஞ்
செய்தாலும் சிராத்த பிண்டங்கள் செய்தாலும்
பிதிர் தேவர்கள் யாவரும் திருப்தியடைவார்கள்.

நீ சங்கமமாகும் சமுத்திரத்தானத்தில் மூழ்குவோர் ஒரு கோடி கற்பகாலம் சந்ததிகளோடு விஷ்ணுலோகத்தில் வாழ்வார் உன் பெருமை முற்றும் அந்த மகாவிஷ்ணுவே சொன்னால் முடியுமோ முடியாதோ என்று எண்ணும்போது வேறு யாராற் கூறமுடியும் என்று பிரமதேவர் முதலியயாவரும் சொல்லியருள்செய்து தங்கள் தங்கள் இடத்திற் போய்ச்சேர்ந்தார்கள்.

முனிவர்களே! சுவேதநதியின் பத்தியும், அதன்பெருமையும், அதன் விவாக முதலியனவும், அதில் ஸ்நானஞ் செய்வோர் பலனும் ஆகிய இவற்றை நன்றாக உங்களுக்குக் கூறினோம். ஆதலால் நீங்கள் யாவரும் மங்களகாத்தோடும் பேரானந்தமுற்றீர்கள். இச்சரித்திரத்தை யார்சொன்னாலும் கேட்டாலும் வைகுண்டலோக வாழ்வு, மேலான சிவலோகவாழ்வுகளை அடைவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. முக்காலுஞ் சத்தியம். இனி நீங்கள் எல்லாரும் பிரமஞானத்தையடைந்து முத்திபெறுதற்கேதுவான புண்ணியவடிவாகிய புவனாசலத்துக்கு வாருங்கள் என்று அகத்திய மகாமுனிவர் சகல முனிவர்களையும்



அழைத்துக்கொண்டு புவனாசலமடைந்து சுவேதநதியில் மூழ்கிச் சுலபமாகவே வேதபுரீசுரரை மீனாட்சியம்மையாரோடு தரிசித்துத் துதித்துப் பேரானந்தமடைந்து மெய்ஞ்ஞானச் செல்வராய் வாழ்ந்தார் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள் என்று சௌனகாதிமுனிவர்களைப்பார்த்துச் சூதமுனிவர் ஓ முனிவர்களே! இப்புவனாசல மகிமை முற்றுங் கேட்டீர்கள்! இதற்கு ஒப்பான திவ்விய தலம் பூலோகத்தில் முக்காலத்திலும் கிடையாது. இக்கதையைப் படிப்போருங் கேட்போரும் முத்தியடைவார். இத்தலத்தில் தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் மற்றைய உயிர்களுள் இதுகாறும் முத்தியடைந்தவர்கள்தொகை இவ்வளவென்று எவராலுங் கூறமுடியாது. ஆதலால் நீங்களும் அத்தலத்தைச்சேர்ந்து பிரமஞானத்தையடையுங்கள் என்று கூறியருள, அங்ஙனமே சவுனகாதிமுனிவர்கள் புவனாசலம்போய்ச் சுவேதநதியில் மூழ்கி வேதபுரீசுரரை வணங்கித் துதித்துப் பிரமஞானத்தையடைந்தார்கள்.

புவனகிரிபுராணவசனம் முற்றிற்று.

உ

குகமயம்.

திருச்சிற்றம்பலம்.

| | |
|---|---|
| சுவாமிதிருநாமம். | புவனநாதர், வேதபுரீசுரர், சுந்தரேசுரர். |
| அம்மைதிருநாமம். | புவனேசுவரி, வேதநாயகி, மீனாட்சி. |
| தீர்த்தம் | மீனாட்சிகூபம் சுவேதநதியாகிய வெள்ளாறு. அது நீவாநதி எனவும் பெயர்பெறும். திருவாத்துறையில் வீற்றிருக்கும் உமாமகேசுவரர் பெருக்கெடுத்துப்பாயும் அவ்வாற்றினைநோக்கிநீவா என்று அழைத்தமையால் நீவாநதி யெனப்பட்டது. இக்காலத்து நிவா நதியென வழங்குகின்றது. |

**தலகாமம்** புவனகிரி, பட்டணம், பெருமோத்தூர். (பெருமைபொருந்திய வேதங்களாற் பூசிக்கப்பட்டமையிற் பெருமோத்தூர் எனப்பட்டது. அது இக்காலத்தில் பெருமாத்தூர் என வழங்குகின்றது.)

விஷ்ணுகோயிலிருக்குமிடம் ஆதிவராக நத்தம். நீவா நதி இதுவென்பது விளங்குமாறு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் திருவாத்துறைத் தேவாரமும் புவனநாதர் இவர் என்பதற்கு திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரமும் இதிற் காட்டப்பட்டன.

---

குகமயம்.

திருச்சிற்றம்பலம்.

புவனாத்திரிநாத பரப்பிரமத்திற்கு வணக்கம். கையினாற்செய்யப்பட்ட குற்றத்தைப் பெரியவர்கள் பொறுத்துக்கொள்ளக்கடவர். சற்ஜனர்களின் மகிழ்ச்சியின்பொருட்டு இது ஆகுக. இந்த க்ஷேத்திரத்தினுடைய மகிமை மேலும் மேலும் வளருக மங்களங்கள் உண்டாகுக.

179495